விலை ரூபா: 5.00 பக்கங்கள் பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 01 புதன்கிழமை (13.02.2002) தொலைபேசி 3378 ஒலி 56


றெனி மூக்குக் கண்ணாடி அகம்
"RENNY"

கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்
540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# கனடாவின் சமஷ்டி முறையே இனப்பிரச்சினைக்குத் தீர்வாகும் !

## புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் பேட்டி

(கிளிநொச்சி)



இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு கனடாவில் உள்ளது போன்ற சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத்தினால் அது சரியான தீர்வாக அமையும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சியில் செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே சு. ப. தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு கருத்துத்தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் அப்பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது

கடந்த 18 வருடகாலமாக இடம் பெற்றுவரும் இன யுத்தத்திற்கு முடிவு கட்டி நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கு கனடாவின் கியூடெக் மாகாணத்தில் காணப்படும் சமஷ்டி முறையின் தீர்வு காணப்படவேண்டும். தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு தீர்வு காணப்படுவதற்கு நடத்தப்படுகின்ற சர்வஜன வாக்கெடுப்பு முறைமை நாகரீகமான அரசியல் கலாசாரத்தினூடாக இலங்கையில் நடாத்தப்படும் நிலை இல்லை தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் விடுதலைப்புலிகளையும் கனேடிய அரசாங்கம் அண்மையில் இணைத்துள்ள போதிலும் கனடாவின் ஆட்சி முறையை வெகுவாகப் பாராட்டிய தமிழ்ச் செல்வன் பல்லாயிரம் தமிழ் அகதிகளை ஆரம்ப காலம் தொட்டு இன்று வரை கனடா உள்ளீர்த்து வருவதாலும் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

(10ம் பக்கம பார்க்க)

## அமைச்சர் ஆறுமுகம் மீண்டும் புலிகளின் பகுதிக்கு விஜயம்

### பொறுப்பாளர்களுடனும் சந்திப்பு

(திருகோணமலை)

தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் வீட்டு வசதிகள் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் நேற்று இரண்டாவது தடவையாக திருகோணமலை மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

திருகோணமலைக்கு விஜயத்தை மேற்கொண்ட அவர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மூதூர் கிழக்குப் பகுதிக்கு சென்று விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் ஜங்கரன் ஏனைய உறுப்பினர்களை சந்தித்து சுமார் ஒன்றரை மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தி

(10ம் பக்கம் பார்க்க)

### பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சையை

## அமைச்சர் டாக்டர் ஜயலத் இன்று ஆரம்பித்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இரண்டாவது தடவையாக நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா இன்று யாழ் போதனா வைத்தியசாலையில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர் குழுவில் ஐந்து இலங்கை

(10ம் பக்கம் பார்க்க)

## நோர்வே சமாதானக் குழு பாலசிங்கத்துடன் பேச்சு

### இழுபறி நிலை தொடர்கிறது

(ஒஸ்லோ)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம் பெறவுள்ள சமாதான முயற்சிகள் தொடர்பாக தமிழீழ

## கப்பல் கம்பனியின் ஏகபோக உரிமையே விலையேற்றத்திற்கு காரணமாகும்

## இழுபறி நிலை தொடர்கிறது

(ஒஸ்லோ)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம் பெறவுள்ள சமாதான முயற்சிகள் தொடர்பாக தமிழீழ விடு தலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சரின் தலைமையிலான தூதுக் குழுவினர் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினர்

இப் பேச்சுவார்த்தை சுமார் 3 மணித்தியாலங்கள் வரை நீடித்திருந்தது நிரந்தர யுத்த நிறுத்தம் தொடர்பாக இலங்கை அரசின் நிலைப்பாட்டை தூதுக்குழுவினர் அன்ரன் பாலசிங்கத்துடன் எடுத்துக் கூறியுள்ளனர். இதே போல் விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இடம் பெறவேண்டிய அம்சங்கள் தொடர்பாகவும் அன்ரன் பாலசிங்கம் தூதுக் குழுவிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

இதே வேளை புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு இரு தரப்பும் இன்னமும் சம்மதம் தெரிவிக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பித்தக்கது

(வ)

# இலங்கை நிர்வாக சேவைக்கு 150 பேர் தெரிவு செய்யப்படுவர்

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு கடந்த ஆண்டு யூன் மாதத்தில் நடாத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகளில் இருந்து 150 பேரை தெரிவு செய்யும் பணிகள் நடைபெறுகின்றன.

இப்பரீட்சை மூலம் வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்புவதென்று பொது நிர்வாக முகாமைத்துவ சீர்திருத்த அமைச்சர் வஜ்ஜிர அபயவர்த்தன எடுத்த தீர்மானத்திற்கமையவே 150 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த 170 பேரின் பெயர் பட்டியலை பரீட்சைத் திணைக்களம் பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளது. தெரிவு செய்யப்படுபவர்கள் அபிவிருத்திக்கும் நிர்வாகத்திற்குமான ஸ்ரீலங்கா நிறுவனத்தில் ஒரு வருடம் பயிற்சியைப் பெறவேண்டும் இவ்வாறு அமைச்சின் செய்தி வெளியீடு தெரிவித்துள்ளது. (ந)

# விலையேற்றத்திற்கு காரணமாகும்

## யாழ். செயலக மாநாட்டில் ரவிராஜ் எம். பி உரை

(யாழ்ப்பாணம்)



கொழும்பிலிருந்து கப்பல் மூலம் உணவுப் பொருட்களை யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவதில் ஒரே ஒரு கப்பல் கம்பனி மட்டும் ஏக போக உரிமை வகிக்கின்றது. இதனால் பொருட்களின் விலைகளும் உயர்ந்து காணப்படுகிறது. என்று யாழ் செயலகத்தில் புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா தலைமையில் நேற்று நடைபெற்ற மாநாட்டில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ் செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற இம் மகாநாட்டில் யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்களான எம். கே. சிவாஜிலிங்கம், மாவை சேனாதிராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர். அங்கு ரவிராஜ் எம்.பி

(10ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஜயலத் இன்று புறப்படுவார்

(யாழ்ப்பாணம்)

யாழ். வந்துள்ள அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா இன்று மாலை கொழும்பு திரும்பவுள்ளார். கொழும்பு திரும்பும் அவர் நாளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் 'சிங்கப்பூருக்குச் செல்லவுள்ளார். (வ)

### உள்ளே

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

### வடப்குதிக்கு பொருட்களை அனுப்பும் குழுவில்

## அமைச்சர் மகேஸ்வரனுக்கு இடம் கொடுக்கப்படவில்லை

(கொழும்பு)

வடபகுதிக்கு அத்தியாவசியப்பொருட்களை அனுப்பிவைப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் சுகாதார அமைச்சர் தயானந்த தலைமையில் அமைக்கப்பட்ட குழுவில் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் இடம் பெறவில்லை

மேற்படி குழுவில் அமைச்சர்கள் மெலிந்த மொறஹொட், டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன உட்பட எட்டு அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளபோதிலும் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனுக்கு அதில் இடம் வழங்கப்படவில்லை.

வடபகுதிக் கான புனர்வாழ்வு அமைச்சுப் பதவி தி. மகேஸ்வரனுக்கு கிடைக்குமென எதிர்பார்க்கப் பட்ட போதிலும், வடபகுதிக்கு அத்தியாவசிய பொருட்களை அனுப்பும் குழுவில் கூட இடம் ஒருக்கப்படாதது குறித்து அரசியல் வட்டாரங்களில் பலமாகப் பேசப்படுகிறது.

(ந)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அமெரிக்காவின் செயலுக்கு சதாம் ஹுசைன் எதிர்ப்பு

(பக்தாத்)

அமெரிக்கா ஈரான் மீது கொண்டுள்ள பகைமை உணர்விற்கு ஈராக்கிய ஜனாதிபதி சதாம்ஹுசைன்பலத்தகண்டனத்தை தெரிவித்துள்ளார்.

ஈரானுக்கு எதிராக அமெரிக்காமேற் கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் குறித்தும் சதாம் ஹுசைன் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கை அமெரிக்காவின் கொடுங்கோல் ஆட்சித் தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

எமது அயல் நாடான ஈராக் மீது அமெரிக்கா விடுக்கும்அச்சுறுத்தல் ஈரானையும் பாதிக்கிறது எனவும் ஈராக் ஜனாதிபதி தெரிவித்தார்.

1980 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் ஈரானுக்கும்ஈராக்கிற்கும் இடையில் எட்டு வருடங்கள் யுத்தம் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (செ)

### அகமும்...

றனர்.

தன்னால் இயலக்கூடிய அளவு விருந்தினர்களை அழைத்து அவர்களை நிறைவாக உபசரித்து உணவு வழங்கி வழியனுப்புவதை விடுத்து குளிக்கப் போய்ச் சேறு பூசிக் கொள்கின்றார்கள். பிந்திவருவோர் உண்ணாது திரும்பும் சந்தர்ப்பங்கள் பல. மறைவிற் சொல்லப் படும் குறைகளைக் கேட்டும் கேளாதவர்கள் போல நடந்து தனது விருந்திற்குச் சமுகமளித்தோர் தொகையைத் தனது புகழின் அளவீடாகக் கொளகின்றனர்.

சில விதி விலக்குகளும் இல்லாமல் இல்லை. அளவான அழைப்பிதழ்கள், மனம் நிறைந்த வரவேற்புகள், தரமான, சுவையான, தாராளமான உணவுவகைகளுடனும் மதிப்பு மரியாதையுடனும் விருந்தினர்களின் மனம் நோகாதவாறு நடந்து விருந்துபசாரங்களை ஒப்பேற்றுகின்றனர். இங்கே இடையிட்டு வந்து சேர்ந்த பணம் காட்டும்ஆடம்பரம் இல்லை. பரம்பரையாக வழிவந்த பண்பாடு இரத்தத்துடன் ஒன்றி இருப்பதையே காணக் கூடியதாக இருக்கின்றது.

### கலந்துரையாடல்

(கல்வயல்)

யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் நேற்று முன்தினம் நோயாளர் சிகிச்சை வாகனத்தில் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்திற்குச் சென்று நகரசபை உப தலைவர் நா.மணிவண்ணன் பதில் செயலாளர் ந.சிவபாலதர்ம குலசிங்கம் ஆகியோருடன் நகர அபிவிருத்தி குறித்து கலந்துரையாடினார். (எ111

# ஜே. வி. பி. கூறுவது போல புலிகள் பயங்கரவாதிகள் அல்லர்

## ஜே. வி பியின் மூத்த உறுப்பினர் கருத்து

(கொழும்பு)

இந்நாட்டு ஆட்சியாளர்களினால் பின்பற்றப்பட்ட தீய கொள்கைகளின் விளைவினால் உருவான கட்சி ஜே.வி.பி.

அதேபோல் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அநீதிகளின் விளைவே விடுதலைப் புலிகள் இயக்கம்.

ஜே.வி.பி. யின் முன்னாள் பொதுச் செயலாளரும் தற்போது அவுஸ்திரேலியாவில் பொறியியலாளராக கடமையாற்றுபவருமான லயனல் போபகே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்,

பயங்கரவாதத்திற்கு சரியான விளக்கங்கள் எதுவும் இல்லை. அதிகாரத்தில் இருந்தால் புரட்சிவாதிகள் அதிகாரத்தில் இல்லாவிட்டால் பயங்கரவாதிகள் இதுதான் வழமையான விடயம்.

விடுதலைப் புலிகள் பற்றியும் இவ்வாறு தான் கூற வேண்டியுள்ளது. தற்போது ஜே.வி.பி. விடுதலைப் புலிகளையும் பயங்கரவாத இயக்கம் எனக் கூறுகின்றது. இது தவறு என்றுதான் கூறவேண்டும்.

புலிகள் இயக்கத்தை தேசிய விடுதலை இயக்கமாகவே நான் கருதுகிறேன். தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கப் போராடும் ஓர் அமைப்பே அது.

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்க ஐ.தே.க. முன்னெடுக்கும் செயற்பாடுகள் மகிழ்வளிக்கின்றன. ஒருபுறம் பொ.ஐ.முவின் காரசாரமான குற்றச் சாட்டுக்கள், மறுபுறம் ஜே.வி.பி. யின் நச்சரிப்புக்கள் என்று ஏகப்பட்ட தலையிடிகள் இருந்தாலும், ஐ.தே.க. மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பாராட்டத் தக்கவை.

முதலாளித்துவ அமைப்புக்கள் மக்களின் உரிமைகளை சிறிதளவாயினும் பெற்றுக் கொடுக்க முன்வராத போது, இடதுசாரிகள் உரிமைகளைப் பெறும் முயற்சியை வரவேற்க வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் செயற்பாட்டிற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளின் போது நாம் எதிர்பார்ப்புக்கு அப்பாற்பட்ட விடயத்தை வழங்கி அதனை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தியுள்ளோம்.

நாம் அவர்களின் கோரிக்கைகளுக்கு முரணான பதிலையே வழங்கியிருக்கின்றோம்.

ஒற்றையாட்சி சிங்கள ஏகாதிபத்தியத்தில் அவர்களது உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்படும் போது தமது தலைவிதியை அவர்களே தீர்மானித்துக் கொள்வது அவர்களுக்குரிய கடமையாகும் என்று குறிப்பிட்டார். (உ)

# இராசி பலன்

13.2.2002
(மாசி1புதன்)
பிரதமை பி.ப3.24வரை
சதயம் காலை 6.03வரை
ராகுகாலம்-12.34-2.04
நல்லநேரம்-5.04-6.34
சித்தம்

**மேடம்**

நினைத்தகாரியம்கைகூடும் பொருள் சேர்க்கை, பெருமைப்படுதல், மனமகிழ்ச்சி

**இடபம்**

காரியம்கைகூடும் ,அதிகபிரயாசை, நல்ல சம்பவம், தூர தேசச் செய்தி

**மிதுனம்**

கட்டுப்பாடு, பிரயாணம், புதியதிருப்பம், முயற்சி தாமதம்

**கடகம்**

உடல்வியாதி, பிரயாண பயம், காரியதடங்கல், உறவினர்வெறுப்பு

**சிங்கம்**

ரோகநிலை, பிரயாணம், முயற்சி கைகூடும், திடீர்நன்மை

**கன்னி**

காரியஅனுகூலம், தொழில் நன்மை, சத்துரு ஜெயம், உடல்நலம்

**துலாம்**

குடும்பக்கவலை, முயற்சிதாமதம், தாழ்ந்தசுபாவம், தன விரயம்

**விருச்சிகம்**

உடல்சோர்வு, தாய்வழி உறவு, காரியதாமதம், கௌரவக்குறைவு

**தனுசு**

காரியம்கைகூடும், இனிய சம்பவம், தனவரவு, அன்னியர்சந்திப்பு

**மகரம்**

வாக்குசெல்லாமை. காரிய தாமதம், குடும்பசுகம், தன விரயம்

**கும்பம்**

அதிகயோசனை, முயற்சி கைகூடும், செல்வாக்கு, சயன சுகம்

**மீனம்**

காரியஅலைச்சல், மனச்சஞ்சலம், சுபசெலவு, உறவினர் மனஸ்தாபம்

(பழைய நேரப்படி கணிக்கப்பட்டது)

வளவன்


# கேள்வி அறிவித்தல்

**புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை, கட்டடங்கள். மகளிர் விவகார அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாணம், திருகோணமலை**

01. யாழ்ப்பாணம் கடற்கரைவீதியில் அமைந்துள்ள வடக்கு கிழக்கு மாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரியினால் அச்சுவேலி சுற்றியற் கூறில் வெளி நோயாளர் பிரிவு (தரை மட்டம்) நிர்மாணிப்பதற்கான கேள்விகள் 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆறாம் திகதி முற்பகல் 10-00 மணிவரை இத்திணைக்களத்தில் ஏற்றுக் கொளளப்பட்டு, பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.
02. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்குத் தரம் எம்-7 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.
03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும். இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல்வேண்டும்.
04. யாழ்ப்பாண மாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரி அலுவலகத்தில் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 3000/- ஐயும், மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா 750/- ஐயும் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பொது 172 பற்றுச்சீட்டுக்களை யாழ்ப்பாண மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமிடத்து 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நான்காம் திகதி பிற்பகல் 3-00 மணிவரை கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொளளலாம்.
05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம். அத்துடன் ஏதும் மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாட்களில், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**சொ. அமிர்தலிங்கம்**
தலைவர்,
அமைச்சு கேள்விச் சபை.

புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக
நலத்துறை கட்டடங்கள்,
மகளிர் விவகார அமைச்சு.

(சி 3527)


# தீயவழியில் செல்வோருக்கு பின்லேடனின் படத்துடன் எச்சரிக்கை சுவரொட்டி

(கொழும்பு)

குடி, சூது, களவு மற்றும் விபச்சாரம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக ஓஸாமா பின்லேடனின் புகைப்படத்துடன் கூடிய எச்சரிக்கைச் சுவரொட்டிகள் தோப்பூர் பிரதேசத்தில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

இப் பகுதியில் இதுபோன்ற நடவடிக்கைகள் மிக மோசமாக இடம் பெறுகின்றமையால் இச்செயலில் ஈடுபடுகின்றவர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அச்சுவரொட்டியில் எழுதப்பட்டுள்ளது. (செ)


யாழ். பல்கலைக்கழகம் பட்டமளிப்பு விழா 2002

**வீடியோ, புகைப்படம் பிடித்தல்**

யாழ். பல்கலைக்கழகத்தின் 21வது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 2002.03.16ஆம் திகதி நடைபெறவுள்ளது இவ்விழா நிகழ்வை வீடியோப்படம் எடுப்பதுடன் 700 புகைப்படங்கள் வரை (4R அளவுள்ள கலர்ப் புகைப்படம்) எடுக்க வேண்டியுள்ளதால், தகுதி வாய்ந்த வீடியோப் படப்பிடிப்பாளர்கள், புகைப்படப் பிடிப்பாளர்கள் தங்களது விலைக்கூற்றை 2002.02.20ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ, உதவிப் பதிவாளர், கல்விக் கிளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். பட்டமளிப்பு விழா நிகழ்வின் போது வீடியோப் படப்பிடிப்பாளர் மின்பிறப்பாக்கி (ஜெனறேட்டர்) கொண்டு வருதல் வேண்டும்.

**பதிவாளர்**
யாழ்.பல்கலைக்கழகம்.
(கி-3526)


காய்ச்சலால்

## மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த சில வாரங்களாக காய்ச்சல் காரணமாக யா/போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று முன்தினம் அங்கு மரணமானார்.

அரசடி நல்லூரைச்சேர்ந்த முத்து சீவரட்ணம் (வயது 53) என்பவரே இவ்வாறு மரணமானார். இவரது மரண விசாரணைகளைமரண விசாரணை அதிகாரி ஜெயரட்ணம் மேற்கொண்டார். (உ-104)


# கண்ணீர் அஞ்சலி

அன்புக்குரியவரும், சமூகத்தொண்டருமான

**வாதவூரர் தவச்செல்வம்**
**(ஜே. பி)**

அவர்களின் திடீர் மரணச்செய்தி கேட்டு ஆறாத் துயரம் அடைந்துள்ளேன். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த துயரத்தை பகிர்வதோடு அவருடைய ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

**செல்லையா மெற்றாஸ்மயில்**

(4479)

## தடங்கல்கள், இடையூறுகள் ஏற்படினும்
# சமாதானத்தை அடைவது என்ற
# இலக்கில் எவ்வித மாற்றமுமில்லை
### பிரதமர் திட்டவட்டமாக தெரிவிப்பு

(கொழும்பு)
சமாதானப் பாதை மிகவும் கடினமானது. தடங்கலும் இடையூறுகளும் மிக்கது.
இருந்த போதிலும் சமாதானத்தை அடைந்தே தீர வேண்டும். அந்த இலக்கில் எந்தவித மாற்றமும் இல்லை.
கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்ற போது அப் பாடசாலயின் பழையமாணவரும் நாட்டின் பிரதம மந்திரியுமான ரணில் விக்கிரம சிங்க நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
பாடசாலையின் ஜே. ஆர். ஜெயவர்த்தனா அரங்கில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதமர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,
இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டுக்கும், ஐக்கிய இலங்கை என்ற சட்டமைப்புக்கும் பங்கம் ஏற்படாவகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு அமைவது அவசியம்.
ஐ. தே. முன்னணியின் முதலாவது இலக்கு, தமிழ் சிங்கள சமூகங்களிடையே ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் அதனூடாக சமாதானத்தையும் ஏற்படுத்துவதாகும்.
கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் இதற்கான ஆணையை வழங்கியுள்ளனர் என்றுகுறிப்பிட்டார். (உ)



## வடமராட்சி சுருக்கெழுத்து
# கழகத்தின் மகஜருக்கு பதில் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)
நூறுநாள வேலைத்திட்டம் மற்றும் தமிழ்மொழி அமுலாக்கல் சம்பந்தமாக வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், கொள்கை அபிவிருத்தி அமுலாக்கல் அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜருக்கு பதில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
கொள்கை அபிவிருத்தி அமுலாக்கல் அமைச்சின்செயலாளர் ஏ. சரித்த ரத்வத்தயால் அனுப்பி வைக்கப்பட்ட அப் பதில் கடிதத்தில்,
மகஜரில் குறிப்பிடப்பட்ட கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு மொத்த கொள்கை அபிவிருத்தித் திட்டத்தில் பொருத்தமான நிலையில் சேர்க்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## கல்வியியற் கல்லூரி
# 1ஆம் அணிமாணவர்களின் இறுதிப்பரீட்சை மார்ச்சில்

(யாழ்ப்பாணம்)
பாடசாலைகளில் உள்ளகப் பயிற்சிகளை மேற்கொண்டு வரும்யாழ். தேசியகல்வியியற் கல்லூரியின் முதலாம் அணி மாணவர்கள், புதிய கல்வியியல் செயற்திட்டங்களைமேற்கொண்டு வருகின்றனர்.
இந்த வகையில், யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் எதிர் நோக்கும் கல்வியியல், வளப்பற்றாக்குறை, வகுப்பறைப்பிரச்சினைகள்என்பவற்றிற்கு நடைமுறையில்தீர்வுகாணும் செயல் திட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக உப பீடாதிபதி பா. தனபாலன் தெரிவித்தார்.
இதே வேளை, இவர்களுக்கான இறுதி பரீட்சை மார்ச் மாத இறுதிப்பகுதியில் நடைபெறவுள்ளது. (உ-09)

# களவு போன சைக்கிள்கள் பொலிஸாரால் மீட்பு

(மந்திகை)
வடமராட்சிப் பகுதியில் திருட்டுப் போன ஐந்து துவிச்சக்கரவண்டிகள் நெல்லியடிப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.
இத் துவிச்சக்கர வண்டிகள் பொது இடங்களில் விடப்பட்டிந்த போதும், வீடுகளில் இருந்தும் திருடப்பட்டு விற்பனை செய்யப்பட்ட சமயமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
இத்துவிச்சக்கர வண்டிகளை உரியவர்கள் ஆதாரம் காட்டிப்பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதிகுமார தெரிவித்துள்ளார். (செ-23)

### தென்மராட்சியில் மேலும் 2 பாடசாலைகள்

(மந்திகை)
தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட மேலும் இரண்டு பாடசாலைகள் கடந்த 6ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
கொடிகாமம் நாவலர் வித்

(08ம்பக்கம் பார்க்க)

## மயக்க மருந்து கொடுத்து
# நோர்வே நாட்டு ஆண்தாதியிடம் கொள்ளை

(கொழும்பு)
நோர்வே நாட்டு ஆண்தாதி ஒருவருக்கு சாராயத்தில் மயக்க மருந்தைக் கலந்து கொடுத்து, அவரிடம் இருந்த இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள், ரொக்கப்பணம் என்பவற்றை இனம் தெரியாத சிலர் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.
இச்சம்பவம் கோட்டை கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தில் இடம்பெற்றுள்ளது.
இச்சம்பவம் குறித்து நோர்வே நாட்டவர் புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (உ-3)

# புகை பிடித்தல், மது பாவனையால் நாளாந்தம் 60 பேர் மரணம்

(கொழும்பு)
புகை பிடிப்பதாலும் மது பாவனையாலும் நாட்டில் தினமும் 60 பேர் மரணமடைவதாக 'ஆபத்தானஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை' தெரிவித்துள்ளது.
புகைப் பிடித்தல், மற்றும் மது அருந்துவதற்காக வருடாந்தம் 50 மில்லியன் ரூபா செலவிடப்படுவதாகவும்,
இருந்த போதிலும் இவ்வாறான பழக்கங்களுக்கு வறியவர்களே பெரும்பான்மையாகஅடிமையாகியிருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.
இதேவேளை, மேற்படி தீய பழக்கங்களால்வருடாந்தம்20 ஆயிரம் பேர் இறப்பதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
மேற்கண்ட தீய பழக்கங்களால், மரணமடைவோர் தொகை ஆசியப் பிராந்தியத்தில் இலங்கையிலேயே குறைவென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

## நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை
# யாழ். பிராந்திய ஊழியர்கள் அமைச்சருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
வடமாகாண தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். பிராந்திய காரியாலயத்தை மூடுவதற்கு எடுத்தமுயற்சிகளைத்தடுத்து நிறுத்துவதென இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் உறுதியளித்துள்ளார்.
மேற்படி யாழில் இயங்கும் பிராந்தியக் காரியாலயத்தை மூடுவதற்கு வடகிழக்குபிராந்திய சேவை நிலைய உயர் அதிகாரிகள் எடுத்து வரும் முயற்சிகள் வெற்றியளிக்கும் பட்சத்தில் அதனால் பாதிப்படையும் ஊழியர்கள் ஒன்றிணைந்து அண்மையில் அமைச்சரைச் சந்தித்து தமது தரப்பு நியாயங்களை விரிவாகஎடுத்துக் கூறியுள்ளனர்.
இதற்குப் பதிலளித்த அமைச்சர் அதனைத் தடுத்து நிறுத்த தீவிர முயற்சிசெய்து வருவதுடன்,
அங்கு நிலவும் வெற்றிடங்களை நிரப்பவும்,
ஊழியர்களின் சேவை நீடிப்பை வழங்குவதற்கும்; புதிய நீர்வழங்கல் திட்டங்களை ஆரம்பித்து அபிவிருத்தி செய்யவும் தான்தீவிரமுயற்சி எடுப்பதாக தெரிவித்துள்ளார். (உ)

## இலங்கை முஸ்லிம்கள்
# அமெரிக்க உணவு வகைகளை புறக்கணிக்க வேண்டுகோள்

(கொழும்பு)
இலங்கை முஸ்லிம்கள், அமெரிக்கத் தயாரிப்பு உணவு வகைகளையும், பானவகைகளையும் புறக்கணிக்க வேண்டும் என்று 'அல்இஸ்லாம் நிறுவனத்தின்' பத்திரிகைவேண்டுகோள் விடுத்துள்ளது.
அமெரிக்கர்கள் இஸ்லாமிய இயக்கத்தை அழிப்பதற்கு நோக்கம் கொண்டிருக்கிறார்கள்என்ற தொனிப்பொருளில் அப்பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரை ஒன்றிலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
உடனடியாக ஆயுத மேந்திப் போராடும்நிலை எம்மிடம் இல்லாதிருக்கலாம். ஆனால் புனித யுத்தத்தை தொடுக்கும் வேறுவழிகள் இருக்கின்றன.
அமெரிக்க உற்பத்திப் பொருட்களை நாம் புறக்கணிப்போம் மும்பாயில் முஸ்லிம் டாக்டர்கள் அமெரிக்க மருந்துகளை சிபார்சு செய்வதில்லை. தாய்லாந்தின் முஸ்லிம் சிறுபான்மையினர் அமெரிக்க மென் பானங்களை அருந்துவதில்லை.
முஸ்லிம் உணவகங்கள் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அமெரிக்கத்தயாரிப்புகளை விற்பனை செய்தலாகாது. திருமண வைபவங்கள் போன்றவற்றிலும் அமெரிக்க உணவுவகைகள் பரிமாறப் படலாகாது.
இவ்வாறு முஸ்லிம்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ)

# சாவகச்சேரி பிரஜைகள் குழுவினால் சிரமதானம்

(மந்திகை)
சாவகச்சேரி நகரிலுள்ள பொது இடங்களைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்வதற்கு சாவகச்சேரி பிரஜைகள் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.
முதற்கட்டமாக நகரிலுள்ள பொதுச்சந்தை, வைத்திய சாலை, நகரசபை என்பன சிரமதானம் செய்யப்படவுள்ளன.
மேற்படி பகுதியில் பெருமளவு மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-23

# இறங்குதுறை பணியாளர்கள் பாதுகாப்பு கவசமின்றி சிரமம்

(மந்திகை)
பருத்தித்துறை இறங்கு துறையில், பொதிகள் இறக்கும் தொழிலாளர்கள் உடல் பாதுகாப்புகவசங்கள் இன்றிச் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
சீமெந்து உரம் போன்றவற்றை கப்பலில் இருந்து இறக்கி வாச்சுக்கும், அதில் இருந்து லொறிகளுக்கும் ஏற்றும் போது உடைந்த, சேதமடைந்த பொதிகளில்இருந்து வெளியேறும் தூசுகள் மற்றும் அப்பொருட்களால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுவதாகவும் சம்பந்தப்பட்ட ஊழியர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.
அமைச்சர் ஜயலத்பொங்கலையொட்டி யாழ். வருகை தந்த போது, பருத்தித்துறை துறைமுகத்தைப் பார்வையிடச் சென்ற சமயம் மேற்படி விடயம் தொடர்பாக விளக்கிக் கூறப்பட்ட போதிலும் இற்றைவரை நடவடிக்கை எடுக்கப்படாமை பற்றியும் பாதிக்கப்படுபவர்களால் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது. (உ-23)

# கட்டாக்காலி நாய்களால் விபத்துக்கள் அதிகரிப்பு

(சண்டிலிப்பாய்)
மானிப்பாய் பகுதியில் கட்டாக்காலி நாய்களால் ஏற்படும் விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் தரப்பில் விசனம்தெரிவிக்கப்படுகிறது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் பிரதேசசபைக்கு முன்னால் செல்லும் பிரதான வீதியில் சென்று கொண்டிருந்தமோட்டார்சைக்கிளிற்கு குறுக்கே நாய் ஒன்று ஓடியதனால்ஏற்பட்டவிபத்தில் அதில் பயணித்த மூவரும் காயங்களுக்கு உள்ளாகிவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.
இதுபோன்ற விபத்துச்சம்பவங்கள் இப்பகுதியில் அடிக்கடி இடம் பெறுகின்றன. எனவே கட்டாக்காலி நாய்களின் நடமாட்டத்தைக் குறைப்பதற்கு பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (செ-125)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்

## வினாத்தாள் 01


ஆக்கம் – ''சாயிகல்வி வட்டம்''
கே.வி.குணசேகரம்
எம்.விக்னேஸ்வரன்

(1) காகங்கள் அறிவுரை கூறுவதாக அமைந்த இப்பாடலை வாசித்து 1 - 6 வரையான வினாக்களுக்கு விடை தருக

கூட்டம் கூட்டமாய் கூடி வாழ்கிறோம்
உணவு கிடைத்ததும் பகிர்ந்து உண்கிறோம்
சுற்றம் சூழலை சுத்தம் செய்கிறோம்
மாலை வேளையில் குளித்து உறங்குகிறோம்

காகங்களில் இருந்து மனிதன் கற்க வேண்டிய நற்குணங்கள் மூன்று
1.
2.
3.
4. காகம் சூழலை எப்படித் துப்பரவு செய்யும்
.............................................................................
5. மாலைவேலை என்பதன் எதிர் சொல்
.............................................................................
6. பகிர்ந்து என்பதன் ஒத்த சொல்
.............................................................................

(2) இல்ல விளையாட்டுப் போட்டியில் நீளம் பாய்தலின் போது விளையாட்டு வீரர்கள் பாய்ந்த நீளம் வரைபடத்தில் தரப்படுகின்றது. அதற்கமைய 7 - 9 வரையான வினாக்களுக்கு விடை தருக




7. கூடுதலாகப் பாய்ந்தவர் மிகவும் குறைவாகப் பாய்ந்தவரை விட எத்தனை C.M கூடுதலாக பாய்ந்தார்?
8. மீராவும் கயல்விழியும் பாய்ந்த தூரத்தை விட மல்லிகா எத்தனை C.M குறைவாகப் பாய்ந்தார்?
9. கமலா இன்னும் ஆகக் குறைந்தது எத்தனை C.M பாய்ந்தால் முதலாவதாக வருவாள்?

(2) 01.02.2002 ம் திகதி வலம்புரி பத்திரிகையில் வெளியான சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா அழைப்பிதழ் ஒன்று கீழே தரப்படுகிறது. அதைப் படித்து 10 - 17 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.

கலையும் கனவுகள்
புதிய பூமி
நிலவில்லா வானம் ஆகிய நாவல்களை எழுதிய பிரபல எழுத்தாளர்
க.வி வேலன் எழுதிய
'கனவான கனவு' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா அழைப்பிதழ்

தலைவர் :- கலாநிதி எஸ்.சிறிஸ்கந்தராசா
காலம் :- 03.02.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30
இடம் :- மாணிக்கவாசகர் மண்டபம் கோப்பாய்
நிகழ்ச்சிகள்:- 1. கடவுள் வாழ்த்து:- திரு.கே.கைலைநாதன்
2. வரவேற்புரை:- திரு.மு.கதிர்காமநாதன்
3. ஆய்வுரை:- திரு.மு.பொன்னம்பலம்
4. நன்றியுரை:- திரு.க.மகேசன்

சு.மகேஸ்வரன்
செயலாளர்
திகதி 29.01.2002
பாரதி சனசமூக நிலையம்
விழாக்குழு சார்பாக

10. வெளியிடப்படும் சிறுகதைத் தொகுதியின் பெயர்
1. வலம்புரி 2. புதியபூமி 3. கனவான கனவுகள்
11. வெளியீட்டு விழாவுக்கு தலைமை தாங்குபவர்
1. வேலன் 2. கதிர்காமநாதன் 3. சிறிஸ்கந்தராசா
12. விழா தொடங்கும் நேரம்
1. மு.ப 9.30 2. பி.ப 9.30 3. பி.ப 10.30
13. நிகழ்ச்சியில் மூன்றாவதாக பேசுபவர்
1. திரு மு.பொன்னம்பலம் 2. திரு கே.கைலைநாதன் 3. திரு ம.மகேசன்
14. நிகழ்ச்சி நடைபெறும் தினம்
1. 01.02.2002 2. 03.02.2002 3. 29.01.2002
15. விழாவை ஏற்பாடு செய்தோர்
1. பாரதி சனசமூகநிலையத்தினர் 2. வலம்புரி 3. திரு க.மகேசன்
16. க.வி.வேலன் எழுதிய நாவல் ஒன்று
1. புதிய பூமி 2. வலம்புரி 3. கனவான கனவு
17. முதலில் நடைபெறும் நிகழ்வு
1. நன்றியுரை 2. ஆய்வுரை 3. கடவுள் வாழ்த்து

18 - 22 வரையான வினாக்கள் வெளிச்சக்கூடு ஒன்றைக் கட்ட விரும்பிய மதுசன் செய்த செயற்பாடுகள் பற்றி விபரிக்கின்றது. அவன் செய்ய வேண்டிய மிகப் பொருத்தமான செயல்களின் கீழ்க் கோடிடுக.

18. மதுசன் வெளிச்சக் கூடு ஒன்றைக் கட்ட விரும்பி ( 1. பசை 2. கடதாசி, 3. ஈர்க்கு) எடுத்தான்
19. அவன் அவற்றை அளவாக ( 1. வெட்டினான், 2. மடித்தான், 3. பூசினான்)
20. நூலை எடுத்து ( 1. கடதாசியை ஒட்டினான், 2. ஈர்க்கைக் கட்டினான், 3. மடித்து ஒட்டினான்)
21. மிகவும் அழகான (1. கடதாசிக் கூடு, 2. வெளிச்சக் கூடு, 3. வண்ணக் கூடு) உருவானது
22. அதைப் பாரத்து மதுசன் ( 1. மகிழ்ந்தான், 2. ஆசிரியருக்கு காட்டினான், 3. கிழித்தான்)

23 - 25 வரையான சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.


23. தொழுவத்தில் எப்போதும் கட்டப்படுவது
1. குதிரை 2. பன்றி 3. மாடு
.............................................
24. வங்கியொன்றில் தினமும் நடைபெறுவது
1. பணப் பரிமாற்றம் 2. கடன்கொடுத்தல் 3. வட்டி பகிர்தல்
.............................................
25. வியாபாரி ஒருவருக்கு எப்போதும் இருக்க வேண்டியது.
1. பொருட்கள் 2. தராசு 3. நாணயம்
.............................................

26 - 29 வரையான வினாக்களுக்குப் பொருத்தமற்ற படத்தின் கீழ்க் கோடிடுக.



26.




27.

28.

29.




30 - 33 வரையான வினாக்களில் உள்ள படங்களில் காண்பிக்கப்படுபவற்றைச் சரியாகக் குறிப்பிடுகின்ற வாக்கியத்தின் கீழ்க் கோடிடுக.


31.
1. விளையாட்டு மைதானம்
2. பாடசாலைப் பூங்கா
3. மரத் தொழிலகம்



32.
1. வைத்தியர் பரிசோதிக்கிறார்.
2. வைத்தியர் உரையாடுகிறார்
3. வைத்தியர் மருந்து கொடுக்கிறார்



33
1. நாற் சந்தியின் குறியீடு
2. செஞ்சிலுவைக் குறியீடு
3. கூட்டல் குறியீடு



33 - 37 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுக

33) 28.07.1992 ல் பிறந்த ஒரு மாணவன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு எந்த ஆண்டில் தோற்றுவான்.
.............................................
34) சர்வதேச ஆசிரியர் தினம் எப்போது கொண்டாடப்படும்.
.............................................
35) கிரிக்கெட் விளையாட்டின் போது ஒரு குழுவின் சார்பில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
.............................................
36) இலங்கை சுதந்திரமடைந்த ஆண்டு எது?
.............................................
37) நுளம்பினால் பரவும் நோய் ஒன்று.
.............................................

38 - 40 வரையான வினாக்களுக்கு A,B எனக் கொண்டு விடை தருக.

$A \times B = 15$
$A \times C = 18$
$C \times B = 30$

38. $A+B+C =$
39. $C-A =$
40. $A+B-C =$

குறிப்பு:
விடைகளை வேறுதாளில் எழுதி அனுப்பவும். இதற்கான விடைகளை 19.02.2002 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்

**கல்விப் பகுதி**
*வினாத்தாள் 01*
''வலம்புரி''
இல: 15, வெள்ளாந் தெரு
யாழ்ப்பாணம்.

மாணவர், முழுப்பெயர்:- .............................
சொந்த முகவரி:- .............................
கற்கும் பாடசாலை:- .............................
மாணவர் கையொப்பம்:- .............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

## இன்று ஒரு தகவல்

# ஆண்டவன் கட்டளை பத்து

பல நூற்றாண்டுகளுக்கு முன் எகிப்து தேசத்தில் மோசே என்ற ஒரு பக்தன் வாழ்ந்து வந்தான். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலே அடிமைப்பட்டு துன்பப்பட்டு தேவனை நோக்கி கூக்குரலிட்டு முறையிட்ட வேளை அவர்களை மீட்டு வழிநடத்த இந்த மோசேயைத் தான் தேவன் தெரிந்து கொண்டார். வழிநடத்தி வரும் வேளையில் தான் தேவன் பத்துக் கட்டளைகளைக் கொடுத்து இதற்கூடாக வழி நடத்தும்படி செய்தார். இந்தக் கட்டளைகள் ஒவ்வொன்றும் மனிதன் நல்ல வழியில் வாழ வழிகாட்டியாக அமைக்கப்பட்டது. அவைகளை இரண்டு கற்பலகையில் தன் கரங்களால் எழுதிக் கொடுத்தார். யாத்திராகமம் 32:16 அது மாத்திரமல்ல அது இரண்டு பிரிவான கற்பனையாகவும் இருந்தது. அதாவது ஒரு பிரிவு தேவனைத் தொழ, மற்றது மனிதன் தன்னை வழி நடத்த என்றவகையில் இருந்தது.

முதலாவது உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும் முழு மனதோடும் முழுப்பலத்தோடும் தொழுதுகொள்ளச் சொன்னவர். இரண்டாவது நீஉன்னை நேசிக்கிறது போல பிறரையும் நேசி. இந்த இரண்டிலும் நியாயப் பிரமாணம் முழுமையும் தீர்க்க தரிசனங்களும் அடங்கிஇருக்கிறது என்றார். மத் 23:37-40 முதலாவது கொடுத்ததில் நான்கு கட்டளைகள் அடங்குகிறது. அது தேவனைத் தொழுதுகொள்ள வழிகாட்டுகிறது. மற்றைய ஆறும் மனிதன் நற்பிரசையாகவும் நீதிமானாகவும் வாழ வழிகாட்டுகிறது. தேவன் கொடுத்த இந்தக் கட்டளைகள் பத்தும் ஒரு பொதுவானதும் உறுதியானதும் யாரும் மாற்றுத்தரங்கள் சொல்லக் கூடாததுமாகக் கொடுக்கப் பட்டுள்ளது.

ஒரு கடவுளை வணங்கு, விக்கிரகம் செய்யாதே, அதை வணங்காதே, கடவுளின் நாமத்தை வீணிலே வழங்காதே, வாரத்தின்ஏழாம் நாளை கடவுளுக்கு ஒதுக்கி பரிசுத்தமாக ஆசரி. இந்த நாலும்தான் இறைவனைத் தொழுது கொள்ள அவர் கொடுத்த பிரமாணம். அடுத்து, உன் தாய் தகப்பனைக் கனம் பண்ணு, கொலை செய்யாதே, விபச்சாரம் செய்யாதே, களவு செய்யாதே, பொய்ச்சாட்சி சொல்லாதே, பிறருடைய ஒன்றையும் இச்சியாதே என்பதே. இவைகளை யாரும் வேண்டாமென்று சொல்ல முடியாது. ஆனால் இன்று என்ன நடக்கிறது. ஒவ்வொருவரும் இதை ஏற்று நடந்தால் இன்று பெற்றோர் துன்பப் படுவாரா? கொலை, கொள்ளை, விபச்சாரம், பொய், களவு மலிந்திருக்குமா?

யேசுநாதர் ஒருமுறை இந்தக் கட்டளை பற்றிப் பிரஸ்தாபிக்கும் பொழுது, ஒருவன் தன் சகோதரனைப் பகைத்தாலும் கொலைக்குச் சமன் என்றார். ஒரு பெண்ணை இச்சையுடன் பார்த்தாலே அவளுடன் விபச்சாரம் செய்தாயிற்று என்று இந்தக் கட்டளைகளை மேலும் வலுவேற்றாரே ஒழிய இன்று போதிப்பவர்கள் போல் கட்டளைகளை அழிக்கவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. இவர்களால் நித்தமும் என் நாமம் தூசிக்கப்படுகிறது என்று தேவன் வேதனைப்படுகிறார். ஏசாயா 52:5 நல்லதைக் கற்று நல்ல பிரசையாக வாழ்வதையே தேவன்விரும்புகிறார். நல்ல மனிதரும் அதையே விரும்புவர்.

ஒருமுறை மகாத்மாகாந்தி அவர்கள் இந்த வேதாகமம் பற்றிக் குறிப்பிடும்போது நான் இந்த வேதத்தையும் அதன் நாயகனான யேசுநாதரையும் நம்புகிறேன். ஆனால் இந்த வேதக்காரரை நம்ப மாட்டேன் என்றார். □

மு. கிருஸ்ணன்
மட்டுவில் வடக்கு
சாவகச்சேரி.

# அனுருத்தவின் மகனை கைதுசெய்ய அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரின் மகன் றொகான் ரத்வத்தையைக் கைதுசெய்யுமாறு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

பொலிஸாருக்கு அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பாகவே றொகான் ரத்வத்தையைக் கைது செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (வ)

# சந்திரசேகரனுக்கு அமைச்சரவை அந்தஸ்து அமைச்சு வழங்கப்படும்

(கொழும்பு)

மலையகமக்கள்முன்னணித் தலைவரும் பிரதி அமைச்சருமான பெ. சந்திரசேகரனுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு வழங்கப்படவுள்ளது.

தோட்டத் தொடர்பாடல் அபிவிருத்தி அமைச்சு ஒன்று புதிதாக உருவாக்கப்பட்டு அந்த அமைச்சு சந்திரசேகரனுக்கு வழங்கப்படவுள்ளது.

அமைச்சரவை அந்தஸ்து பெறாத அமைச்சர்களான கருணாசேனகொடித்துவக்கு, இந்தியாஸ் பாக்கீர்மாக்கார்' ரவி கருணநாயக்கா, மெலிந்த மொறகொட, ராஜிதசேனரட்ண ஆகியோருக்கும்அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளது. (வ)

# யாழ். குடாநாட்டிற்கு அமெரிக்கத் துறவி ஆன்மீகப் பயணம்

(தென்மராட்சி)

குடாநாட்டுக்கான ஆன்மீகப் பயணத்தை மேற்கொண்டு அமெரிக்க துறவியான சுவாமிதந்திரதேவா மகராஜ் அடுத்தமாதம் இங்கு வரவுள்ளார் என வட பிராந்திய இந்துப்பேரவையின் செயலாளர் தர்மதீபம் சிவலோகநாதன் தெரிவித்தார்.

சுவாமி தந்திரதேவா மகராஜ் தன்னுடன் 45, மூன்று சக்கரவண்டிகளையும் சுமார் 7 ஆயிரம் அப்பியாசக் கொப்பிகளையும் எடுத்து வரவுள்ளார்.

இவர்கடந்த வருடமும் குடா நாட்டுக்கு விஜயம் செய்து ஆன்மீக எழுச்சிச் சொற்பொழிவுகளைப் பல்வேறு இடங்களிலும் நிகழ்த்தியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

## குடாநாட்டில் 134 நலன்புரி நிலையங்களில்

# 3 292 குடும்பங்களைச் சேர்ந்த 12 426 பேர் தங்கியுள்ளனர்

(தென்மராட்சி)

யாழ். குடாநாட்டில்யுத்த அனர்த்தங்கள் மற்றும் இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக தமது சொந்த வீடுகள் கிராமங்களை விட்டு வெளியேறிய 3 ஆயிரத்து 292 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 426 பேர் ஒன்பதுபிரதேசசெயலர்பிரிவுகளிலுள்ள134இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில்வருடக் கணக்கில்தங்கியுள்ளனர்.

பருத்தித்துறையில் 24, கரவெட்டியில் 22, மருதங்கேணியில் வலிகாமம் வடக்கில்5, கோப்பாயில்6, உடுவிலில் 15, சங்கானையில் 21, சண்டிலிப்பாயில் 26, நல்லூரில் ஒன்று அடங்கலாக134 நலன்புரி நிலையங்களில் இவர்கள் தங்கியுள்ளனர்.

இவற்றில் பலாலி காங்கேசன்துறை, மயிலிட்டி, பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி போன்ற இடங்களில் இருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களே தங்கியுள்ளன.

அதே வேளை, குடா நாட்டில் உள்ள மொத்த சனத்தொகையில் சுமார் ஒரு லட்சத்து 45 ஆயிரம் பேர் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறிய நிலையில் இடம் பெயர்ந்தவர்களாக வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சுகாதாரத் தொண்டர் சங்க நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் இன்று பி.ப. 2.30 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (உ.)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(வண்ணார்பண்ணை)

வேலணை பிரதேச விவசாய மற்றும் மீன்பிடி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் எதிர் வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் செ. இரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-109)

## பிரதமருடன் சந்திப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பூட்டான்வெளிவிவகார அமைச்சர் லியோன்யோஜிங்லங்கியை நேற்று முன் தினம் மாலை அலரிமாளிகையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச் சந்திப்பில் இருநாட்டு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை இடம் பெற்றதாக அலரி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந-4)

## நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நாய்த்தடுப்பூசி ஏற்றும்பணிஇன்றுகாலை 8.30- 9.30மணிவரைதாவடி காளி கோவிலடியிலும், மு.ப 9.45- 10.45 மணிவரை தாவடி பத்திரகாளி கோவிலடியிலும், மு.ப11.00-12.00 மணிவரை தாவடிப் பிள்ளையார் கோவிலடியிலும், பி.ப. 12.15- 1.15 மணிவரை தாவடிஆரம்ப சுகாதாரநிலையத்திலும், பி.ப 2.00-3.00 மணிவரை புளித்திட்டி சனசமூக நிலையத்திலும், பி.ப 3.15- 4.15மணிவரைதாவடி ஐந்து வேம்படி கோவிலடியிலும் இடம் பெறும். (செ)

## நீர்வையில் அறநெறி போதனை

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீ கணேசா முன்பள்ளியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அறநெறிக்கல்வி போதனை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வாராவாரம் தொடர்ச்சியாக நடைபெறவுள்ள இப்போதனையானது ஆரம்ப, மத்திய, உயர் பிரிவுகளுக்கு நடத்தப்படவுள்ளது.

சமயக்கல்வியை முன்னெடுக்கும் விதமாக நடத்தப்பட்ட இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் சுமார் 90 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர்.

நீர்வேலி செல்லக்கதிர்காம பிரதம குரு கு. தியாகராசக் குருக்கள் (நீர்வைமணி), அரச கேசரிப்பிள்ளையார் ஆலய பிரதமகுரு சோமதேவக் குருக்கள், சாம்பசதாசிவக்குருக்கள் உட்பட சமய ஆர்வலர்கள் பெருமளவில் இந்நிகழ்வில் பங்குபற்றினர். (க)

## அவுஸ்திரேலியா செல்லமுயன்ற

# 39 இலங்கையர் திருப்பி அனுப்பப்பட்டனர்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவிற்குள் சட்டவிரோதமாககுடியேற முயன்ற முப்பத்தொன்பது இலங்கையர்கள் நேற்று முன் தினம் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள் இலங்கை அரசாங்கத்தின் சம்மதத்துடனேயே திருப்பி அனுப்பப்பட்டதாக அவுஸ்திரேலிய தூதரகம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிப்பது தங்கியிருப்பது வெற்றியளிக்காது என்பதையும் உணர்த்தியுள்ளதாக, அவுஸ்திரேலிய அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (செ)

# மட்டு மாவட்டத்தில் கொள்ளைச் சம்பவங்கள் கட்டுப்படுத்துகை

(மட்டக்களப்பு)

புலிகளின் பெயரைப் பாவித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்று வந்த கொள்ளைகள், வாகன அபகரிப்புச் சம்பவங்கள்பெருமளவுவீழ்ச்சியடைந்துள்ளன.

மேற்படி புலிகளின்பெயருக்குக் களங்கமேற்படுத்தும் விஷமிகளின் திட்டமிட்ட செயல் குறித்து, விழிப்பாகச் செயற்படுமாறு விடுதலை : புலிகள் அமைப்பினால் பொது மக்களிடத்தில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதற் கிணங்கவே இச்சம்பவங்கள் குறைந்திருப்பதாக கூறப்படுகிறது. (உ)

# புலிகள்பகுதிக்கு செல்வதை அமைச்சர்கள் பிற்போடவும் பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் புலிகளின்கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்வதை ஒத்திவைக்குமாறுபிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, அமைச்சர்களைக் கேட்டுள்ளார்.

அமைச்சர்கள் தங்களது அரசியல் இலாபம் கருதியே வன்னிப் பகுதிக்குச் செல்கிறார்கள் என்று இப்போது பொதுவாகக் கருதப்பட்டுவருகிறது.

இந்நிலையில்; அமைச்சர்களின் வன்னி விஜயம் சமாதான முயற்சிகளில்எத்தகைய பாதிப்பையோ, குழப்பங்களையோ ஏற்படுத்தி விடக்கூடாது.

சுமுகமான முறையில் சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என்று பிரதமர் விரும்புவதாக அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ)

# அரையாண்டு பரீட்சை அறிமுகம்

(வண்ணார்பண்ணை)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் 2002ஆம்கல்வியாண்டில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா கற்கை நெறியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு அரையாண்டு முறையில் (Semester System) விரிவுரைகள், பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன. (உ-109)

## சிந்தனைக்கு விருந்து

### நித்திய கண்டம்

கண்டம் விடுத்துமறு கண்டம் செலுத்துகணை
எண்டிசையும் அச்சத்தை ஏய்துவிக்கும் - கண்டறியாப்
புத்தாக்கம் பற்பலவே ஆனாலும் வாழ்வின்று
நித்தியகண் டத்தில் நிலைப்பு.

'பழையவன்'

# தென்மராட்சி மாணவர்களுக்கு மிதிவெடி விழிப்புணர்வு கருத்தரங்கு

## ச.செ.ச ஏற்பாட்டில் இன்று முதல் ஆரம்பம்

(மந்திகை)

தென்மராட்சிப் பிரதேசத்தில்இடம்பெற்ற போர் நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து, தற்போது மீள இயங்க ஆரம்பித்துள்ள பாடசாலைகளில்இன்றுமுதல் மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இடம் பெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டு வருகிறது.

மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வு இன்மையால், கடந்த காலங்களில் இளம் தலைமுறையினர் பலர் இப்பகுதியில் மிதிவெடி மற்றும் பொறிவெடிகளில் அகப்பட்டு உயிர், அவயவஇழப்புக்களைச் சந்தித்துள்ளமை தெரிந்ததே,

இதேவேளை,

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற யுத்தங்களின்போது, பெருமளவில் மிதிவெடிகள், பொறிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-23)

## முன்பள்ளி ஆசிரியர்கள் அமைச்சருக்கு மகஜர்

(தென்மராட்சி)

உள்ளூர் அதிகார சபைகளினால் நடாத்தப்படுகின்றமுன்பள்ளிகளில் நிலவுகின்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பும் வகையில் வடக்கு-கிழக்கு மாகாண சபையினால் 2001 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட 17 முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பதவிகள் இன்னமும் நிரப்பப்படவில்லை.

இதுதொடர்பாக மேற்படி நேர்முகப்பரீட்சையில் தோற்றிய முன்பள்ளி ஆசிரியர்கள் மகஜர் ஒன்றினை புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு விவகார அமைச்சர் டாக்டர். ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கு நேற்றைய தினம் அனுபிவைத்துள்ளனர்.

(உ-77)

## ஜப்பான் அரசுக்கு அமைச்சர் பாராட்டு

(கொழும்பு)

இலங்கையின் பல்வேறு துறைகளினதும் அபிவிருத்தி சம்பந்தமாக, ஜப்பானிய அரசாங்கத்தால் வழங்கப்படும் அனுசரணைகளும், உதவு தொகைகளும்போற்றத்தக்கன என வெகுசனத் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் டிஜிரல் தொலைக்காட்சி தொடர்பு சம்பந்தமான சர்வதேச கருத்தரங்கில் உரையாற்றும்போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வாழும் ஒவ்வொரு பிரஜையும் தொழில்நுட்ப அறிவு நிறைந்தவராக இருக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் ஜப்பானிய அரசாங்கம் காட்டும் அக்கறை பாராட்டத்தக்கது.

1974 ஆம் ஆண்டு தொடக்கம், 4 ஆயிரத்திற்கும் அதிகமான இலங்கைப் பிரஜைகளுக்கு தொழில்நுட்ப பயிற்சியை ஜப்பான் வழங்கியது என்பதுடன், எதிர்காலத்தில் இலங்கையிலுள்ள அபிவிருத்தி சம்பந்தமான துறைகளை முன்னெடுத்து மக்களின்வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு ஜப்பான் மேலும் கூடுதலான உதவிகளை செய்யும் என்ற நம்பிக்கையினையும் வெளியிட்டுள்ளார். (உ-8)

## வணிகர் கழகத்தினால் பிரதமருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

பொருட்கள் சேவைகள் மீதான அதிகரித்த வரி அறவீடு மற்றும் இவற்றுக்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறுவதில் உள்ள சிக்கல்கள் ஆகிய விடயங்கள தொடர்பாக யாழ். வணிகர் கழகத்தினால் பிரதமர்ரணில் விக்கிரமசிங்காவுக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில், ஒருசிலவர்த்தகர்கள் தமது செல்வாக்கினைப் பயன்படுத்தி பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறுவது,

ஏனைய வர்த்தகர்களுக்கான அனுமதியை வழங்கும் விடயத்தில் இழுத்தடிப்புக்களை பாதுகாப்பமைச்சு மேற்கொள்வது ஆகிய விடயங்கள் சுட்டிக் காட்டப் பட்டுள்ளதுடன்,

அரசியல் செல்வாக்கு மிக்க வர்த்தகர் சிலரின் தான்தோன்றித் தனமான நடவடிக்கைகளே யாழ். குடாநாட்டில் பொருட்களின் விலையேற்றத்திற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வணிகர்கழகத்தினால் மேற்படி நிலைமைகளைச் சுட்டிக்காட்டி அண்மையில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கு கடிதம் அனுப்பப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ- 19)

## ஓய்வுபெற்றதினத்திலிருந்து இருவாரங்களுள்ஓய்வூதியம்

### பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரச சேவையில்உள்ள ஊழியர்கள் ஓய்வு பெற்ற இருவாரங்களுக்குள் ஓய்வூதியத்தினைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படும் என்று ஓய்வூதிய திணைக்களப் பணிப்பாளர் எஸ். பி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர்மேலும் தெரிவிக்கையில்; ஓய்வூதியத்திற்கான விண்ணப்பப்படிவங்களைச் சரியாகப் பூர்த்திசெய்யத்தவறுவதால்தான் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தாமதமாகின்றன.

மேற்படி விண்ணப்பங்கள் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பிய இருவாரங்களுக்குள் விண்ணப்பதாரர் பணியாற்றிய அலுவலகங்களுக்கு ஓய்வூதியம் அனுப்பிவைக்கப்படும என்று குறிப்பிட்டார். (எ-8)

### போர் அபாயங்கள் இன்மையால்

## பாதுகாப்பு கட்டணத்தை நீக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

காப்புறுதி சந்தாப்பணங்களின் மீது விதிக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புகட்டணத்தை முற்றாக நீக்கிவிடுமாறு வெளிநாட்டுக் காப்புறுதிக் கம்பனிகள் பலவற்றிடம் இலங்கைபாதுகாப்பு அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்துடன் இது தொடர்பாக ஏற்கனவே தொடர்பு கொண்ட போதிலும் எதுவித பலனும்கிடைக்கவில்லை என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைத்த பின்னர் நாட்டில் எதுவித போர் அபாயங்களும் அற்ற சூழ்நிலை உருவாகி வரும் இவ் வேளையில் நாட்டில் அனேகமாக பீதிகள் அற்ற மனநிலையில் மக்கள் வாழ்கிறார்கள் எனவும் பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தின் மீதும், விமானப்படை தளம் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்களை அடுத்து லண்டன் லோயிஸ் நிறுவனம் தலைமையிலான காப்புறுதிக் கம்பனிகள் மேலதிக கட்டணங்களை விதிக்க ஆரம்பித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-8)

## வர்த்தமானி அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கு புதிய ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளிவரவுள்ளது. (உ-9)

## தென்மராட்சிப் பகுதி வர்த்தக நிலையங்களை மீள இயக்க நடவடிக்கை

(மந்திகை)

தென்மராட்சிப்பிரதேசத்தில், மக்கள் மீளக்குடியமர்வதில் ஆர்வம் காட்டிவரும் இவ்வேளையில்,

அப்பகுதிவர்த்தக நிலையங்களை இயக்குவதற்கான நடவடிக்கைகளும் முழு அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, சாவகச்சேரி நகரில் உள்ள தமது வர்த்தக நிலையங்களை இயக்க விரும்புபவர்களை வணிகர் மன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-23)

# செய்தித் துளிகள்

## செய்முறைப் பரீட்சை

(மந்திகை)

வடமராட்சிதெற்கு-மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முதலாவது பிரிவு அபிவிருத்தித் தொண்டர்களுக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 19,20 ஆம்திகதிகளில் தேவரையாளி இந்துக் கல்லூரியில் இயங்கும் பயிற்சி நிலையத்தில் நடைபெறுமென சம்பந்தப்பட்ட பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

இவர்களுக்கான எழுத்துப் பரீட்சைகள் கடந்த திங்களன்று இடம்பெற்றமைகுறிப்பிடத்தக்கது.

பனை, தொழில்நுட்பம், உணவு பதனிடல், மின் இணைப்பு தொழில் நுட்பம், கட்டடத்தொழில் நுட்பம், மரத் தொழில் நுட்பம் ஆகிய பயிற்சி நெறிகளுக்கே செய்முறைப் பரீட்சை இடம்பெறவுள்ளது.

(உ-23)

## கருத்தரங்கு

(ஏழாலை)

பொலிஸாரின் ஏற்பாட்டில் சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வல்லுறவு சம்பந்தமான கருத்தரங்குஒன்றுகடந்தவியாழக்கிழமை மல்லாகம் மகாவித்தியாலயத்தில், மல்லாகம் தெற்கு கிராம அலுவலர் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த நலிந்தா சில்வாவினால் சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வல்லுறவு, குழந்தைபராமரிப்பு ஆகியவை பற்றிய விளக்க கருத்துரைகள் வழங்கப்பட்டது.

கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் இதில் பங்கு பற்றினர்.

சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல்வல்லுறவு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு காங்கேசன் துறையில் தனியான பொலிஸ் பிரிவு ஒன்று இயங்குவதாகவும் கடிதமூலம் அல்லது தொலைபேசி (இல. 01- 421111) மூலம் பொதுமக்கள் தொடர்பு கொண்டு பிரச்சினைகளை தெரியப்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ-12)

## புதிய பஸ்தரிப்புநிலையங்கள்

(கல்வயல்)

வலிகிழக்கு பிரதேச சபை, பிரயாணிகளுக்கு வசதியாக பஸ் தரிப்பிடங்களை நீர்வேலி கந்தசாமிகோவிலடி, கோப்பாய் கிறிஸ் தவக்கல்லூரி முன்றல், புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி முன்றல் முதலியஇடங்களில் நிறுவியுள்ளது. (எ- 111)

## தும்பளையில் துணிகரத் திருட்டு

(கல்வயல்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தும்பளையில் பிரபல சட்டத்தரணி சபாநாயகம் இரவீந்திரன் வீட்டில் திருடர்கள் பெறுமதிமிக்க நகைகள், உடைகள், பணம் முதலினவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

குறித்த தினத்தன்று இரவு வீட்டிலுள்ளோர் அண்மையிலுள்ள லூர்த்து மாதாதேவாலய திருவிழாவிற்குச் சென்றிருந்தனர். திரும்பி வந்து பார்த்தபோது திருட்டுப் போனநிலையில் வீட்டுப் பொருட்கள் அலங்கோலமான நிலையில்கிடந்தன.

உடனடியாக இது குறித்து அவர்கள் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (எ- 111)

## இன்று விபூதி புதன்

(மானிப்பாய்)

கத்தோலிக்க சமய மக்களின் ''விபூதிப்புதன்'' தினம் இன்றாகும். இதனையொட்டி கத்தோலிக்க தேவாலயங்களில் இன்று விசேட வழிபாடுகள் இடம்பெறுவதுடன்,

இன்று தொடக்கம் 40 நாட்கள் வரையான காலப்பகுதி தபசுக் காலமாகவும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

(5-232)

## காங்கேசன் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வரா இன்று காங்கேசன்துறை கைதிகள் தடுப்புமுகாம் செல்லவுள்ளார்.

அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு அவர்களின் உறவினர்களால் வழங்கப்படும் கடிதங்கள் மற்றும் உடைகளை எடுத்துச்சென்று ஒப்படைப்பதுடன்,

அவர்களால் உறவினர்களுக்கு வழங்கப்படும் கடிதங்களையும் எடுத்துவரவுள்ளார். (உ-19,10)

## இறுதிப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் 2ஆம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் மார்ச் மாதம் 29 ஆம் திகதியும்,

முதலாம் வருட மாணவர்களுக்கான பரீட்சை ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதியும் நடைபெறவுள்ளதாக கலாசாலை உப அதிபர் வி. கே.கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

(உ-9)

## பாம்பினால் கடியுண்டவர் வைத்தியசாலையில்

(மந்திகை)

யார்க்கருப் பகுதியில்வயலில் வேலைசெய்து கொண்டிருந்த சமயம் வைக்கோலினுள் இருந்தபாம்புதீண்டிய ஒருவர் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெல்லியடியைச் சேர்ந்த எஸ்.செல்வராசா (வயது-45) என்பவரே இவ்வாறுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவர். (செ-23)

## பாடநூல்கள் விநியோகம்

(மந்திகை)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கான இலவசப் பாடநூல் விநியோகம், வரணி மகாவித்தியாலயத்தில் நேற்றுமுதல்இன்றும் இடம்பெற்று வருகின்றது.

சம்பந்தப்பட்டபாடசாலை அதிபர்கள் பாடநூல்களை வந்து பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (உ-23)

### தடுப்புமுகாமை

## பார்வை

(கொழும்பு)

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி நேற்றைய தினம் பூசாதடுப்பு முகாமிற்கு விஜயம் மேற்கொண்டார்.

அவர், தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளை பார்வையிட்டதுடன், அங்குள்ள நிலைமைகளையும் அவதானித்தார். (உ-5)

# கவிஞர் குடியரசு காலமானார்

(சென்னை)

சிறுநீரக சிகிச்சைக்காக நேற்று முன்தினம் சென்னை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்த ம.தி.மு.க.துணைப் பொதுச் செயலாளர் கவிஞர் குடியரசு நேற்றுக் கால மானார். அவருக்கு வயது 72.

சிறந்த எழுத்தாளரும், கவிஞரு மான குடியரசு தமிழக அரசின் பாவே ந்தர் விருதைப் பெற்றவர். (ந-4)


## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

உள்ளக விளையாட்டுக் கழகம்

மக்கள் வங்கி வட வலயத்தின்

அனுசரணையுடன் முன்னாள் அதிபர்

கலாநிதி D.T. நைல்ஸ்

ஞாபகார்த்தமாக நடாத்தும்

### 4 வது உள்ளக விளையாட்டுப் போட்டிகள்

1. BADMINTON
2. TABLE TENNIS
3. CARROM
4. CHESS

பிரிவுகள் [ஆண்கள்/ பெண்கள்]

1. 10 வயதின் கீழ் 1993 ம் ஆண்டின் பின் பிறந்தவர்கள்
2. 12 வயதின் கீழ் 1991/92 ம் ஆண்டுகளில் பிறந்தவர்கள்
3. 14 வயதின் கீழ் 1989/90 ம் ஆண்டுகளில் பிறந்தவர்கள்
4. 16 வயதின் கீழ் 1987/88 ம் ஆண்டுகளில் பிறந்தவர்கள்
5. 18 வயதின் கீழ் 1985/86 ம் ஆண்டுகளில் பிறந்தவர்கள்
6. திறந்த அடிப்படை - வயதுக் கட்டுப்பாடு இல்லை

*விண்ணப்ப முடிவுத் திகதி: 28. 02. 2002 பி. ப. 4 மணி*

*வீரர் ஒழுங்கு தெரிவு: 02. 03. 2002*

*போட்டிகள் ஆரம்பம்: 07. 03. 2002 பி. ப. 3 மணி*

தொடர்பு: பொறுப்பாசிரியர்கள்-

BADMINTON:- திரு த. சந்திரகுமார்
TABLE TENNIS:- திரு ஜெ. மோகன் (உள்ளக விளையாட்டு முதல்வர்)
CARROM:- திரு க. ஸ்ரீதரன்
CHESS:- திரு கை. சீவரத்தினம்
விளையாட்டு முதல்வர்: திரு. வி.எஸ். மகேந்திரன்

[C/3529] - அதிபர் -


# தகவல் தொழில் நுட்பக் கருத்தரங்கு இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் நூறு நாள் வேலைத் திட்டத்தின் கீழ் இவ் வருடத்தில் இருந்து 1ஏ பி, 1சி தரப் பாடசாலைகளில் 6ம் வகுப்பில் இருந்து அமுல்ப்படுத்தப்படவுள்ள தகவல் தொழில் நுட்பக் கல்விப் பாடத்திற்கான நான்கு நாள் தொடர்க் கருத்தரங்கு இன்று புதன் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இதில் மேற்படி பாடசாலை அதிபர்களையும், ஒவ்வொரு பாட சாலைகளில் இருந்தும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த ஆசிரியர்கள் இருவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராசா கேட்டுள்ளார். (வ)

# இறுதி வருட முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக இறுதி வருட சிறப்புக் கலைத் தேர்வு முடிவுகள் நேற்று வெளியாகின.

தமிழ், இந்து நாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம், சமூகவியல், அரசறிவியல், நாடகமும் அரங்கியலும், நுண்கலை, மொழியியல், சமஸ்கிருதம், மெய்யியல் ஆகிய சிறப் புத்துறைப் பாடங்களில் தோற்றிய மாணவர்களின் முடிவுகளே வெளியாகியுள்ளது.

இதேவேளை யாழ். பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைப் பீட நுண்கலைமாணி, டிப்ளோமா முடிவுகளும் வெளியாகியுள்ளன.

எனினும் பொருளியல், புவியியல் ஆகிய சிறப்புத்துறைத் தேர்வு முடிவுகள் வெளிவரவில்லை. அவை இன்னும் சிலதினங்களில் வெளி வரும் எனப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந)

# யாழ். நகரில் மீண்டும் எரிபொருள் விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் தெருவோர எரிபொருள் நிலையங்கள் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

இவ் விற்பனை நிலையங்கள் விடுமுறை நாட்களிளேயே இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

யாழ். செயலக விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் இவ் விற்பனை நிலையங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

# அமைச்சு அலுவலகம் திறந்து வைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் இந்து கலாசார அமைச்சு அலுவலகம் 15ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.15 மணி முதல் 10.15 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மேற்படி அலுவலகத்தை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைப்பார். (வ)

# இருட்டில் சென்றவர் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

இரவு நேரம் வீதியால் நடந்த சென்ற ஒருவர் இனந்தெரியாத இளைஞர் கோஷ்டி ஒன்றினால் கடுமையாகத் தாக்கப்பட்டு படுகாயங்களுக்குள்ளான சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இரவு ஈச்சமோட்டைப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இனந்தெரியாத இளைஞர் கோஷ்டியினால் இருட்டடிக்குள்ளானவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சந்திரன் (வயது 50) எனத் தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான நபர் தற்போது யாழ்ப்பாணம் பெரிய கோவிலில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு மூன்று தினங்களாக இரவு நேரங்களில் இனந்தெரியாதோரால் இத்தகைய இருட்டடிச் சம்பவங்கள் இடம் பெற்று வருவதால் ஊர்மக்கள் விசனம் அடைந்துள்ளனர். (ம.110)


## உதை பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் தரம் III, II, I ற்கான மத்தியஸ்தர் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 15ம், 16ம் திகதிகளில் நடைபெற உள்ளன.

ஏற்கனவே தரம் III ற்கு விண்ணப்பித்தவர்களும் மேலும் புதிதாக தரம் II, I ற்கு விண்ணப்பிக்க விரும்புபவர்களும் 14 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் யாழ். உதைபந்தாட்ட லீக்/ பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

*யாழ். உதைபந்தாட்ட லீக்*

[C/3530]


## உடன் தேவை

- அலுவலக சிற்றூழியர் (இரவுக் கடமைகளில் மட்டும்)
- வீடுகளுக்கு பத்திரிகை விநியோகிப்போர். (தத்தம் இடங்களில் விநியோகிக்க முடியும்)

குறிப்பு:-
14.02.2002 வியாழக்கிழமை காலை 10 மணிக்குப் பின்னர் நேரில் வரவும்.

*நிர்வாக உத்தியோகத்தர், வலம்புரி.*



## விசேட நிகழ்வுகளின் காட்சிகள்



யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரில் அண்மையில் புதிய கணனி நிலையம் திறந்து வைக்கப்பட்டது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஐ.ஐ.எஸ். நிறுவன இயக்குனர் திரு. விக்னேஸ், பீடாதிபதி திரு. தி. கமலநாதன் ஆகியோர் மாலையுடன் நிற்பதையும், டாக்டர் வை. தியாகராஜா மற்றும் உப பீடாதிபதிகள், விரிவுரையாளர்களையும் படத்தில் காணலாம்.



வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சையில் சிறப்புச்சித்தி பெற்ற வர்த்தக வங்கி முகாமையாளர் எஸ். ரவீந்திராவுக்கு சங்கத்தின் தலைவர் திரு. ஆர். சுந்தரலிங்கம் பரிசு வழங்குவதையும் நிர்வாக சபை அங்கத்தவர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.
குறிப்பு: மேற்படி பரீட்சையில் சிறப்புச் சித்தியெய்திய இலங்கை வங்கி மானிப்பாய்க் கிளை உதவி முகாமையாளர் திருமதி. வைரவநாதன் ஜனனியும் பரிசு பெற்றுக் கொண்டார்.




பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ணா சாரதா சேவாச்சிரமத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் மாடிக் கட்டிடத்தின் கட்டுமாணப் பணிகள் நடப்பதைப் படத்தில் காணலாம்.

## விசேட நிகழ்வுகளின் காட்சிகள்



யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற போது சங்க மத்தியஸ்தர்கள் எடுத்துக் கொண்ட படம். தலைவர் வி. பாலசிங்கம், செயலாளர் எஸ். சிறீகாந்தன் ஆகியோருடன் சங்கத்தின் மூத்த உறுப்பினர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.



அண்மையில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றம் நடத்திய சாந்தனின் இரு நூல்கள் அறிமுக அரங்கில் கலாநிதி. எஸ். சிவலிங்கராசா தலைமையுரை நிகழ்த்துவதையும், ஆய்வுரை நிகழ்த்திய அருட்திரு. ஜெயசீலன் அடிகள், மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி திரு. ந. ஜீவேஸ்வரா ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



வடபிராந்திய இந்துப் பேரவையின் ஆதரவில் அறுபத்து மூன்று நாயனார் மடத்தில் நடைபெற்ற சமய நிகழ்ச்சியில் உரும்பிராய் க. ஆனந்தராசா அன்னைதாசன் அவர்கள் தெய்வீக இன்னிசை சொற்பொழிவு நிகழ்த்துவதையும் அருகில் அமைப்பாளர் அருள்நெறித் தொண்டர் சிவ. ஆறுமுகசாமி, செயலாளர் ப. சிவலோகநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்

## பலஸ்தீன தீவிரவாதிகளின் கட்டுமீறிய செயற்பாடுகளுக்கு யசீர் அரபாத்தே காரணம்

### இஸ்ரேலிய பிரதமர் குற்றச்சாட்டு

(ஜெருசலேம்)

நானே பலஸ்தீன மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர். இஸ்ரேலிய அரசு என்னுடனேயே பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்.

இவ்வாறு பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத் தெரிவித்துள்ளார்.

யசீர் அரபாத் தனது தலைமையகமான பாரமுல்லாவில் இஸ்ரேலிய இராணுவத்தினரால்வீட்டுக்காவலில் வைக்கப்பட்டது போன்ற ஒரு முற்றுகை நிலையிலேயே தற்போதும் இருந்துவருகின்றார்.

அங்கு இருந்தபடியே பி.பி.சி. வானொலிக்கு பேட்டியளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யசீர் அரபாத்தின் இந்த கருத்துக்கு பதிலளிக்கும் முகமாகப் பேசிய இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன்,

இஸ்ரேல் -பலஸ்தீன பிரச்சினை தொடர்பாக பலஸ்தீனர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புகிறேன். ஆனால் யசீர் அரபாத்துடன் அல்ல.

தற்போதைய வன்முறைகளுக்கு யசீர் அரபாத்தே காரணம். பலஸ்தீன தீவிரவாதிகளின் கட்டுமீறிய செயற்பாடுகளுக்கு அவரே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

யசீர்அரபாத்தைத்தவிர்த்து வேறொரு பலஸ்தீன தலைவருடன்பேசவே தான்விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-5)

## அமெரிக்காவின் முதுகில் சவாரிவிடும் பின்லேடன்

(பாங்கொக்)

தாய்லாந்தின் நாகோன் பதோம் என்ற ஊரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பௌத்த ஆலயமொன்றின் கூரையின் மேல் அமெரிக்க கழுகின்மீது ஒஸாமாபின்லேடன் அமர்ந்து பயணம் செய்வது போன்ற சிலையொன்று அமைக்கப்பட்டுளளது.

இச் சிலையைப் பார்வையிட்ட பலரும் அமெரிக்காவின் முதுகில் சவாரி செய்யும் அளவிற்குஒஸாமாபின்லேடன் சக்திவாய்ந்தவராக விளங்குகிறார் என்பதைகுறிக்கிறதோ எனப் பேசிக்கொண்டனர். (செ)

# உலக தரிசனம்

### ஜோலோதீவில்

## படையினர் தாக்கியதில் தீவிரவாதிகள் பலர்பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸின்தென் பகுதியில் உள்ள ஜோலோ தீவில் அபுஸாய் தீவிரவாதிகளின் மறைவிடங்கள் மீது பிலிப்பைன்ஸ் படையினர் குண்டுத்தாக்குதல் நடத்தியதில், ஒஸாமா பின் லேடனுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

அபுஸாய் தீவிரவாதிகள் பிலிப்பைன்ஸ் இராணுவத்தினர் மீது கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய தாக்குதலுக்குப் பதிலாகவே இக் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதலின் போது ஆறு இராணுவ வீரர்களும் கொல்லப்பட்டுள்ளனர். (செ)

## சுபாஷ் சந்திரபோஸின் வரலாறு படமாகிறது

(சென்னை)

இந்திய சுதந்திரப்போராட்டத்தில் முக்கிய பங்காற்றிய நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் வரலாற்றுத்திரைப் படமாக்கும்முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இம்முயற்சியில் இந்திப் படத்தயாரிப்பாளர் ஷியாம் பெனகல் ஈடுபட்டுள்ளார்.

முதன் முதலில் இந்திய இராணுவத்தினை அமைத்தவரான சுபாஷ் சந்திர போஸைப் பற்றி இதுவரை வெளிவராத பல தகவல்கள் இத்திரைப்படத்தில் இடம் பெறவுள்ளது.எனவும் தயாரிப்பாளர் தெரிவித்துள்ளார். (செ)

### ரொனிபிளேயர் நைஜீரியா விஜயம்

(லண்டன்)

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவிற்கு பிரித்தானிய பிரதமர் ரொனிபிளேயர் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான போருக்கு ஆதரவு திரட்டும் நோக்கிலேயே இவரது மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்கான விஜயம் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## சகபாடிகளைச் சுட்டுக் கொன்ற சிப்பாய் சிக்கினார்

(ஸ்ரீநகர்)

இந்தியாவின் காஷ்மீர்மாநிலத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர்தன்னுடன்கடமையில் ஈடுபட்டிருந்த ஏனைய 3சிப்பாய்களை சுட்டுக் கொன்று விட்டு தப்பியோடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பூஞ்மாவட்டத்தில் இடம் பெற்ற இச்சம்பவத்தை அடுத்து மேற்படி சிப்பாய் தீவிர தேடுதலின் பின்னர் கைது செய்யப்பட்டதாகவும் இச்சம்பவம் தொடர்பாக அவரிடம் புலன்விசாரணை நடைபெற்று வருவதாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் காஷ்மீரின் எல்லைப் பகுதிகளில் பணியாற்றும் படைவீரர்களைச் சுட்டுக் கொலைசெய்தும் தற்கொலை செய்து கொள்வதும் வழமையான தொன்றாகக் காணப்படுகிறது.

அப்பகுதிகளில் தொடர்ச்சியாக கடமையாற்றுவதால் ஏற்படுகின்ற மன உளைச்சலே இதற்குக் காரணமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## இராமர் ஆலயத்தை மிக விரைவில் கட்டுவோம்

### விஷ்வ ஹிந்து பரிஷத் சூளுரைப்பு

(புதுடில்லி)

அயோத்தியில் பாபர் மசூதி இருந்த விடத்தில் இராமர் ஆலயம் கட்டும்பணிகளை மிக விரைவில் ஆரம்பிக்கப் போவதாக இந்தியாவின் கடும்போக்கு இந்து அமைப்பான விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பு சூளுரைத்துள்ளது.

அயோத்தியில் 16 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பாபர் மசூதி 1992 ஆம் ஆண்டு டிசம்பர்மாதம் இடிக்கப்பட்டது.

இதனையடுத்து இந்து முஸ்லிம் கலவரங்கள் வெடித்தமையும் இதில் சுமார் இரண்டாயிரம் பேர் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (செ)

## பாரதிய ஜனதா மீது சோனியா பாய்ச்சல்

(புதுடில்லி)

மதம்,சாதி என்பவற்றின் பெயரில் பாரதிய ஜனதாக் கட்சி மக்களை ஏமாற்றிவருவதாக காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாகாந்தி குற்றஞ் சாட்டியுள்ளார்.

சட்டசபைத்தேர்தலுக்காக காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபட்டுவரும் சோனியா காந்தி, பிரசாரக் கூட்டங்களில் எல்லாம் பாரதிய ஜனதாவைப் பற்றி கடுமையாக விமர்சித்து வருகிறார்.

இதே வேளை இந்திய பிரதமரான வாஜ்பாய் சோனியாகாந்தி வெளிநாட்டுப் பெண் ஆகையால் இந்தியா பற்றிய அக்கறை அவருக்கு இல்லை எனக் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)



### விளையாட்டு செய்திகள்



## பட்மின்ரன் போட்டி இலங்கை அணி பங்கேற்பு

(கொழும்பு)

நெதர்லாந்தில் நடைபெறவிருக்கும் பட்மின்ரன் போட்டியில் இலங்கை அணியும் பங்குபற்றவுள்ளது.

இப்போட்டி இம் மாதம் 17 ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கை அணியில் 7 ஆண்களும் 6 பெண்களும் அங்கம் வகிக்கின்றனர்.

நெதர்லாந்து செல்லும் இலங்கை அணிக்கு டாக்டர் ஏ ஆர்.எல். விஜயசேகரமுகாமையாளராகவும் கே.எஸ்புஷ்பகுமார பயிற்சியாளராகவும் செல்கின்றனர். (உ-10,5)

## உலககிண்ண போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி

(வெலிங்டன்)

நியூஸிலாந்தில்நடைபெற்று முடிந்த19வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியா சம்பியனானது

கிறைச்சேர்ட் நகரில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் தென்னாபிரிக்காவும் அவுஸ்திரேலியாவும் மோதின.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, 50 ஓவர்முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, 45.1 ஓவரில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இப்போட்டித்தொடரில் 13 போட்டிகளில் அவுஸ்திரேலியா வெற்றியீட்டியுள்ளது.

இதேவேளை, கடந்த வருடம் இடம் பெற்ற உலகக் கிண்ணப்போட்டியில்இந்தியா வெற்றியை தட்டிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-5,10)

### மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்தானசி.சி.த.க. பாடசாலையின் இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 1.30 மணிக்கு அதிபர் த.நாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் கல்விக்கோட்ட அதிகாரி திருமதி த.காங்கேயனும் சிறப்பு விருந்தினராக மேலதிக மாகாணக்கல்விப் பணிமனையின்நிர்வாக உத்தியோகத்தர் பூ.புலேந்திரராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## இந்தியப் பிரதமர் பாகிஸ்தானுக்கு நிபந்தனை

(புதுடில்லி)

இருநாடுகள் இடையேயும் இருந்துவரும் முரணான போக்குகளை நீக்கவும், உறவுகளை மேம்படுத்தவும்பாகிஸ்தான் விரும்பினால், பாகிஸ்தான் கொண்டுள்ள கொள்கையிலும், கோட்பாடுகளிலும் இருந்து விலகிக்கொள்ள வேண்டும் என பிரதமர்வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது பாகிஸ்தானுடன் எந்நேரத்திலும் பேச்சுக்களை நடத்துவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

ஆனால் ஒருதலைப்பட்சமான இவ்வாறானசெயற்பாடுகளினாலும், முயற்சிகளினாலும் ஏற்படும் பயன் யாதொன்றுமில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் எல்லைப் புறங்களில் இந்தியப் படைகள்குவிக்கப்படுவது எந்தவொரு நாட்டையும்தாக்குவதற்காகவல்ல தற்பாதுகாப்புக்காகவே என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## மக்களை ஏமாற்றி சிறு நீரகம் அபகரிப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் மக்களை ஏமாற்றி சிறு நீரகங்களை அகற்றும் பாதகச் செயல்அதிகரித்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

படிப்பறிவற்ற பாமரமக்களிடம் இரத்ததானம் வழங்குவதற்கு வைத்தியசாலைக்கு வருமாறு கூறி, அவர்களுக்குத் தெரியாமலே திருட்டுத் தனமாக சிறுநீரகங்களை அகற்றி எடுத்துக் கொண்டு அதற்குப் பெறுமதியாக இருபதாயிரம் ரூபா பணத்தினைக்கொடுத்து விடுகின்றனர்.

இவ்வாறு சிறுநீரகங்களை இழந்தவர்கள்சிறுநீரகம் என்றால் என்னவென்றே தெரியாதவர்கள்.

இதுபோன்ற மக்களை ஏமாற்றி பணம் சம்பாதிப்பதற்கு என்றே முகவர்கள் செயற்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (செ)

### தென்மராட்சியில்

தியாலயம், சரசாலை ஸ்ரீ கணேசவித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளுமே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (செ-23)

உற்றான் அளவும்பிணியளவும்
காலமும் கற்றான் கருதிச்
செயல்

- குறள்

# வலம்புரி

## விடிவு ஏற்படும்

யாழ். போதனா வைத்திய சாலையில் இன்று பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

யுத்த அனர்த்தங்கள் மற்றும் பிறப்பியல் குறைபாடுகள் காரணமாக அங்கங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை இப் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை மூலம் நிவர்த்தி செய்ய முடியும். இதனால் காலாகாலமாக இறைவா எமது அங்கப் பாதிப்புகளுக்கு நிவாரணமே இல்லையா என ஏங்கித் தவித்த பல உள்ளங்களுக்கு விடிவு ஏற்படப் போகிறது.

மருத்துவ உலகில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ள போதும் இப்போதாவது யாழ்ப்பாணத்து மண்ணில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படுவது பாதிக்கப்பட்டவர்களின் கண்ணீருக்கு முடிவு கட்டும் என்பது உறுதி.

யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் பல நூறாக இருந்தபோதிலும் அதில் அங்கவீனங்களும், அங்கப்பாதிப்புக்களும் உடல் குறையை மட்டுமன்றி உள்ளத்தையும் பாதிப்படையச்செய்தது.

விமானத் தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்கள், எரிகுண்டு வீச்சுக்களால் எத்தனையோ இளைஞர்களும், யுவதிகளும் பாதிப்படைந்தனர். இப் பாதிப்புக்களால் அவர்கள் வீட்டிற்குள்ளேயே முடங்கிக்கிடக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டதுடன் தன்னம்பிக்கையையும் இழந்து காணப்பட்டனர். இந்நிலையில், இத்தகைய பாதிப்புக்களை உணர்ந்து அதனை நிவர்த்தி செய்யும் வகையில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து சத்திர சிகிச்சையை மேற்கொள்ள உதவிய அத்தனைபேரும் பாராட்டுக்குரியவர்கள். அப்பாராட்டு யாழ்ப்பாணத்து கலாசாரம் போன்று பத்திரிகை விளம்பரமாக அன்றி பாதிக்கப்பட்ட உள்ளங்கள் தமது பாதிப்புக்கு நிவாரணம்பெறும்போது உதிர்க்கின்ற ஆனந்தக் கண்ணீர் என்பதை உரியவர்கள் தெரிந்துகொள்ளுங்கள் சிகிச்சை பாதிக்கப்பட்ட அனைவருக்கும் கிடைப்பதும் அவசியமாகும்.

# அகமும் முகமும் மலர அன்புடன் அளிக்கப்படுவதே விருந்து எனக் கொள்ளும் நிலை இன்று இல்லை

விருந்தோம்பல் என்பது மிகவும் உன்னதமான பணி என்பதனை மிகவும் துல்லியமாகத் தெய்வப்புலவர் திருவள்ளுவர் தனது விருந்தோம்பல் என்னும் அதிகாரத்தில் விளக்கியுள்ளார். விருந்தோம்பல் என்பது பணம் படைத்தவர் பணம் இல்லாதவர் என்பதனைப் பொறுத்ததல்ல. அதேபோன்று விருந்து என்பதும் விலையுயர்ந்த அறுசுவை உணவு தான் என்ற நிபந்தனையுமல்ல. தமக்கெனத்தயாரித்த உணவின் ஒரு பகுதியை வீட்டுக்கு வந்தவரை விருந்தாளியாக உபசரித்துக் கொடுத்தாலே போதுமானதாகும். ஆகவே விருந்தோம்பல் என்பது ஒருவரின் மன விசாலத்தைப் பொறுத்ததேயாகும்.

### அகமும், முகமும் மலர உபசரித்தல்

தன்னைத் தேடி வந்தவரை வெளியே காத்திருக்க வைத்துவிட்டு ஒருவர் உள்ளே இருந்து உண்ணும் உணவானது அவரைச்சாவிலிருந்து காப்பாற்றும் உணவாக இருந்தாலும், அச் செயலானது இகழ்ச்சிக்குரிய ஒன்றாகும் என்று கூறுகின்றது ஒரு குறள். பசியோடு வீட்டுக்கு வந்தவரை அகமும் முகமும் மலர உபசரித்து உணவு பரிமாறுவதே விருந்தோம்பலின் இலட்சணமாகும். வீட்டில் உணவு இல்லாத போதும் விருந்தினரைக் கண்டவுடன் 'கிடைத்தற்கரிய பேறு இதுவல்லவோ' என்று எண்ணி அயல் வீட்டாரிடம் கடனாகப் பொருள்களைப்பெற்று உணவுதயாரித்துக் கொடுத்து உள்ளம் பூரிப்பவர்கள் இருந்தார்கள் என்று பழங்கால இலக்கியங்கள் கூறுகின்றன. இதற்கும் மேலாக யாசித்துப் பெற்ற பொருளைத்தமக்கென உணவு தயாரித்த வேளை வந்த விருந்தினருக்கு மனப்பூர்வமாக வழங்கி விட்டுத் தாம் பசியோடு துயிலும் மாந்தர்கள் இருந்ததாகவும் இலக்கியங்கள் கூறுகின்றன. இக்காலத்தில் வீட்டில் மேலதிகமாக உணவு இருந்தாலும் விருந்தாளிகளைக் கண்டவுடன் ஒன்றுமில்லாதவர்கள் போல வேடம் போட்டு, உணவு பரிமாற மனம் இல்லாதவர்களாக நடந்து கொள்கின்றார்கள்.

### அன்பிலார் இட்ட அமுது

விருந்தினர்களின் இலக்கணமும் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அனிச்சம்பூ மோந்தவுடன் வாடி விடுவது போல், அகமும் முகமும் மலர்ந்து நோக்காது பரிமாறப்படும் உணவினைக் கண்டால் விருந்தினர் முகமும் வாடி விடுமாம். அன்பில்லாது, கணவனின் வற்புறுத்தலால் வெறுப்புடன் இடப்பட்டஉணவினைக் கண்ட ஒளவையார்,

## திருமதி சரோஜினி கல்யாணசுந்தரேசன்

'காணக் கண் கூசுதே
கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய் திறக்க
மாட்டாதே - ஊனுக்கென்
என்பெலாம் பற்றி
எரிகின்றதையையோ
அன்பிலாள் இட்ட அமுது'

என்றும், உலகின் கண்ணே மிக மிகக் கொடியது அன்பில்லாமல் மனையாள் கொடுக்கும் உணவு என்றும் கூறியுள்ளார்.

ஆதிகாலத்தில் புலவர் ஒருவர் ஒரு இல்லத்தினை வாழ்த்தி ஒரு பாவினை அவ்வீட்டின் முன்புறத்தில் எழுதுங்கால் அவ்வீட்டிற்கு எல்லா வகைச் செல்வங்களும் வந்து சேருமாம் என்று இலக்கியங்கள் கூறுகின்றன. ஆகவே வீட்டுப் பொருள்கள் யாவற்றையும் விற்றுக் கூட இவ்வகையான பா ஒன்றினை எழுதிக் கொள்ள மக்கள் புலவர்களுக்குப் பணம் வழங்கி வந்தார்களாம். போதுமான பணம் கொடுக்காத பட்சத்தில் பாவின் சில அடிகளை எழுதிவிட்டு மிகுதிப்பணம் கொடுக்கும் போது மிகுதியான அடிகளையும் எழுதுவதாகக் கூறிச் செல்வார்களாம் புலவர்கள். அப்படியான முற்றுப் பெறாத பா ஒன்றினுக்கு, அவ்வில்லத்தினர் அன்புடன் வார்த்த கூழைக்குடித்த ஒளவையார் மிகுதி அடிகளையும் எழுதி முடித்து விட்டாராம். அந்த மாத்திரத்தே அவ்வீட்டவர்க்குச் சகல செல்வங்களும் பெருகியனவாம். ஆகவே அன்புடன் கொடுத்த கூழுக்காக விலை கொடுத்து வாங்கவும் முடியாத பா ஒன்றினை ஒளவையார் பாடினார் என்றால் அன்புடன் கொடுத்த கூழின் விலைதான் எத்தகையது என்பதனை நாம் யோசிக்க வேண்டி இருக்கிறது. ஒளவையாரை ஒரு புலவர் கூழுக்குப்பாடி என்று இகழ்ந்தாராம்.

இஃது இவ்வாறிருக்க, இக்காலத்தில் விருந்தோம்பல், விருந்துண்ணல் பல பரிமாணங்களைக் கண்டுள்ளது. பலவகையான விழாக்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சிகள், பேச்சு வைபவங்கள் போன்ற பல நிகழ்ச்சிகளில் மிகவும் விலையுயர்ந்த உணவு வகைகள் பரிமாறப்பட்டுச் சுவைக்கப்படுகின்றன. இங்கே விருந்தானது ஒரு நிறுவனம் சார்பாக வழங்கப்படும் காரணத்தால், விருந்துண்ணல் தான் முக்கியமாகின்றது. அழைப்பிதழ்களைப் பெற்றுக் கொண்டவர்கள் விருந்துண்ணலாம். இங்கே விருந்தினருக்கு ஒதுக்கப்பட்ட இடம் தான் முக்கியமெனலாம். பிரதம விருந்தினர், விசேட விருந்தினருக்கு அண்மையிலிருந்து விருந்துண்ணவே யாரும் விரும்புவர். ஒதுக்குப்புறமாக இருந்தால் சிலருக்கு விருந்துண்ணவே மனம் வராது தம்மை அந்தஸ்தில் குறைவாக நினைத்து விட்டார்களே என்ற ஆதங்கம்.

### மதிப்பு வழங்கப்படாத உணவு

மணவிழாக்கள், புனித நீராட்டு விழாக்கள், காலஞ்சென்றவர்கள் சார்பாக வழங்கப்படும் விருந்துகள் தான் விருந்தோம்பல் என்னும் அம்சத்தில் அடக்கப்பட வேண்டியவை. இங்கு தமக்கு வேண்டியவர்களை எல்லாம் அழைப்பிதழ்கள் மூலமும் பத்திரிகை விளம்பரம் மூலமும் அழைக்கின்றார்கள். தனிப்பட்ட அழைப்புகளுக்குக் கொடுக்கும் மதிப்பினை மக்கள் பத்திரிகை அழைப்புகளுக்குகொடுப்பதில்லை. காரணம் விருந்துண்ணல் என்பது ஒரு சுயகௌரவத்தினைப் பாதிக்கும் விடயம். தன்மானமுள்ள எவரும் மதித்து வழங்கப்படாத உணவினைப் புசிப்பதற்கு மனம் நாணி நிற்பர். ஆகவே விருந்தினை ஏற்பாடு செய்பவர்கள் விருந்தினர்களைத் தனித்தனியே அகமும் முகமும் மலர வாருங்கள் என்று உபசரிக்காத இடத்தில் உண்ணும் உணவு மானமற்று உண்ட உணவாகும்.

இந்தப் புனிதமான அம்சத்தை இக்காலத்தில் விருந்து வழங்குபவர்கள் கருத்திற் கொள்வதில்லை. அழைப்பினைக் கொடுத்துவிட்டாற் போதும் எல்லோரும் வருகை தந்து தாம் வழங்கும் உணவினை உண்டு செல்வார்கள் என்ற இறுமாப்புடன் நடந்து கொள்கின்றார்கள். வீடியோ படப்பிடிப்பு போன்ற டாம்பீகங்களிலேயே கூடிய கவனம் செலுத்துகின்றார்கள். போலிக் கௌரவத்திற்காக, சம்பந்தமில்லாத எல்லோருக்கும் அழைப்பிதழைக் கொடுக்கிறார்கள். அழைப்பிதழ் கொடுத்துவிட்டால் போதுமா? யாவருக்கும் போதுமான உணவு தயாரிக்கப்படுவதில்லை. தரக்குறைவான உணவும் தயாரிக்கப்படுகின்றது. விருந்தினர்களை வரவேற்க ஒருவரை நியமிப்பதில்லை. விருந்தினர்கள் மனநிறைவாக உண்டு செல்கின்றார்களா என்று கவனிக்க ஒருவரில்லை. வந்தவர்களில் அநேகமானோர் ஏன் இங்கு வந்தோம் என்று வருந்திய வண்ணம் உண்டு செல்கின்றனர்.

### குளிக்கப் போய் சேறு பூசுதல்

சிலர் சூழ்நிலையை அவதானித்து விட்டு உணவு உண்ணாமலே வீடு திரும்புகின்றனர். உணவு பற்றாமல் வந்தவுடன் விருந்தோம்பல் செய்பவர் ஏதோ சமாளிக்கட்டும் என்று தலைமறைவாகி விடுகின்றார். சிலர் 'பந்திக்கு முந்து' என்ற வாசகத்தில் அடைக்கலம் புகுந்து அன்னதானமடமென்று நினைத்து நாணத்தினையும் களைந்துவிட்டு, முண்டியடித்துக் கொண்டு விருந்தினை உண்ண முற்படுகின்றனர். விருந்தினர்களை உட்கார வைத்து உணவு பரிமாற இடமில்லாது உண்டு கொண்டு இருப்பவர்களைச் சீக்கிரம் உண்ணுமாறு சொல்லாலும், செயலாலும் இம்சிக்கின்

(2ஆம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### அஞ்சுதல்


அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்சவருவதும் இல்லை.

- அப்பர்

சூரியனுடைய முன்னிலையில் இருளுக்கு இடமில்லை. இறைவா, உன் அன்பர் அஞ்சுதல் என்பதை அறியார்.

ஆபத்துக்கு அஞ்சுதல் உயிர்களின் இயல்பு. நிகழ்வன யாவும் உண்மையில் ஈசன் செயல். கேடுடையதாகத் தென்படுகிற செயலிலும்நலம் மறைந்திருக்கிறது. பக்தர்களுக்கு அவ்வுண்மை புலப்படுகிறது. மரணம் மாண்புடையது என்பது அவர்களுக்குப் புலப்படுகிறது. நமனை அஞ்சுதல் என்பதை அவர்கள் அறியார். கடவுளைச் சார்ந்திருப்பவர் எதற்கும் அஞ்சுவதில்லை.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (1)

### 13 - 02 . 2002 திருநீற்றுப்புதன்

உயிர்வாழ உணவு அவசியம். உணவே நஞ்சானால்? உயிர் காப்பது இரத்தம். உயிர் காக்க ஏற்றிய இரத்தமே நோய்க் கிருமிகளின் இருப்பிடமாக இருந்தால்? வேலி அமைப்பது பாதுகாக்க, வேலியே பயிரை அழித்தால்? அறச் செயல்களும் இறைவேண்டலும் நோன்பும் இறை உறவில் வளர ஆன்மீக நெறியில் தழைக்க நொறுங்கிக் கிடக்கும் மனித ஆளுமையை ஒன்றுபடுத்திக் கட்டியெழுப்ப வழங்கப்பட்ட ஒப்பற்ற சாதனங்களாகும். ஆனால் இந்த அரிய கொடைகள் தூயஉள்ளத்துடன் நேரிய யனத்துடன் பயன்டடுத்தப்படும் போது ஆன்மாவைப் பலப்படுத்தி இறைவனில் நிறைவு காண நம்மை வழிநடத்துகின்றன. மாறாக தீய நோக்குடன் பரிசேயத்தனத்துடன் செய்யும்போது இவையே நம்மை இறைவனிடமிருந்து பிரித்து நம்மைப் பிளவுபட செய்யும்பாவ செயல்களாக மாறும் அபாயத்தை இயேசு சுட்டிக்காட்டுகிறார். தவக்காலத்தைத் தொடங்கும் நாம் அறச்செயல்களை நோன்பை சிறகுகளாகப் பயன்படுத்துவோம் - நம்மை சிறைப்படுத்தும் கூண்டுகளாக்க வேண்டாம்.

- காவலன்

# ஈரான் விமானம் வீழ்ந்து நொருங்கியது

## பயணம் செய்த 117 பேர் பலியாகினர்!

(டெஹ்ரான்)

ஈரானின் மேற்குப் பகுதியான ஹொராமாபாத் நகருக்கு அருகே பயணிகள் விமானம் ஒன்று வீழ்ந்து நெருங்கியதில் அதில் பயணம் செய்த 117 பேர் உயிரிழந் துள்ளனர்.

ஈரான் தலைநகர் தெஹிரா னில் இருந்து மேற்குப் பகுதி யான ஹொராமாபாத் நகருக்கு பயணிகள் விமானம் வந்து கொண்டிருந்த போது மலை ஒன்றுடன் மோதியதில் அதில் பயணம் செய்த அனைவரும் உயிரிழந்தள்ளதாக ஈரானின் விமானப் போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். ரஷ்யாவில்



வீழ்ந்து நொருங்கிய விமானத்தையே படத்தில் காண்கின்றீர்கள் படம்:- ராய்ட்டர்

தயாரிக்கப்பட்ட ஈரானுக்குச் சொந்தமான இவ் விமானம் பெரும் சத்தத்துடன் வெடித்துச் சிதறி யுள்ளதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவிக்கின்றனர். விபத்து ஏற்பட்ட மலைப்பகுதியில் கடும் பனி மூட்டம் நிலவுவதால் சடலங்களை மீட்க முடியாதுள்ளதாகவும் சடலங்கள் பனியினால் மூடப்பட்டு காணப்படுவதாகவும் விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இவ் விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் முழுமையாக அறியப்படாத போதும் இயந்திரக் கோளாறு காரணமாகவே விமானம் வீழ்ந்து நொருங்கியுள்ளதாக ஈரான் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ந-4)

**கப்பல்...**

மேலும் பேசுகையில் உணவுப் பொருட்களை ஏற்றுவதில் கப்பல் கம்பனி காட்டி வரும் ஏக போக உரிமையும், உணவுப் பொருட்களை ஏற்றுபவர்கள் ஒரு சிலராக இருப்பதும், விலை உயர்வுக்கு காரணமாக உள்ளது.

விமானத்தில் கூட தட்டுப்பாடான பொருட்கள் ஏற்றப்பட்டு வருவதுடன் அவை அதிக விலையில் விற்கப்படுகின்றன. இவற்றை நீக்க அமைச்சர் என்ற முறையில் தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ஜெயலத் கப்பல் கம்பனிகளும், தனிப்பட்ட கம்பனிகளும் உணவுப் பொருட்களை ஏற்றி இறக்குவதில் ஏகபோக உரிமை வகிப்பதை எனது அமைச்சு அனுமதிக்காதென்றும் றான் மூலம் உணவுக்கப்பல் ஒன்று ஏற்பாடு செய்து தரப்படும் என்றும் உறுதியளித்தார். (வ)

**அமைச்சர் டாக்டர்...**

நிபுணர்கள் உட்பட பதினாறு நிபுணர்கள் இடம் பெற்றுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையை ஆரம்பித்து வைத்த பின்னர், வைத்தியசாலையில் இடம்பெற்று வரும் கட்டிட நிர்மாண வேலைகளை பார்வையிடுவார். (ம)

**கனடாவின்...**

கனடாவில் மனித உரிமைகள் மீறல் சட்டங்களையும் ஜனநாயகக் கோட்பாடுகளையும் கலங்கரை விளக்கமாக விடுதலைப் புலிகள் கருதுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

**அமைச்சர் ஆறுமுகம்...**

யுள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைவரம் பற்றியும் மூதூர் கிழக்குப் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் இரு தரப்பினருக்கும் இடையே பேச்சுக்கள் நடைபெற்றுள்ளது.

இதனையடுத்து மூதூர் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள பின் தங்கிய கிராமங்களை அமைச்சர் ஆறுமுகம் பார்வையிட்டார் சுமார் 25 வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாத இக்கிராமங்களை புனரமைப்பதற்கு மிக விரைவில் நடவடிக்கை எடுப்பதாக அவர் புலிகளிடம் உறுதியளித்துள்ளார்.

இதே வேளை தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அமைச்சர்கள் வருவதை தாம் விரும்பவில்லையென விடுதலைப்புலிகள் அறிவித்திருந்த போதிலும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் புலிகளின் பகுதிகளுக்கு சென்று அவர்களுடன் பேச்சு நடத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-4)

*அழிந்து போன தென்மராட்சியை புனரமைக்க*

# சாவகச்சேரி பிரதேச சபையை இரண்டு நிர்வாக அலகாக மாற்றுக!

### அமைச்சர் ஜயலத்திற்கு அன்ரன் பொன்னையா கடிதம்

தென்மராட்சிப் பிரதேசம் ஒரு பிரதேச செயலர் பிரிவின் கீழ் 60 கிராமசேவகர் பிரிவைக் கொண்ட ஒரு பரந்த பிரதேசமாகும். இவற்றிலும்11 கிராமசேவகர் பிரிவை உள்ளடக்கியதாக சாவகச்சேரி நகர சபையும் மிகுதி 49 கிராமசேவகர் பிரிவை உள்ளடக்கியதாக சாவகச்சேரி பிரதேசசபையும் உள்ளது. எனவே யாழ்ப்பாணத்திலேயே மிகக் கூடிய நிலப்பரப்பினையும் கிராம சேகர் பிரிவையும் உள்ளடக்கியதாக எமது பிரதேச சபையின் நிர்வாக அலகு உள்ளது. ஆனால் அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் தொகைகள் எல்லாப் பிரதேச சபைகளுக்கும் சமமாகவே ஒதுக்கப்படுவதால் கூடிய நிலப்பரப்பினை நிர்வகிக்கின்ற எமக்கு போதாதுள்ளது.

இவ்வாறு சாவகச்சேரிப் பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா, அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார். அக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

சாவகச்சேரி பிரதேச சபை 06 உப அலுவலகங்களைக் கொண்டு இயங்குகின்றது. அவை கச்சாய், மிருசுவில், வரணி, சரசாலை, கைதடி, நாவற்குழி என்பனவாகும். எனவே ஒரு நிர்வாக அலகின் கீழ் இயங்கும் எமது பரந்த பிரதேசத்தின் அபிவிருத்திகளை கவனிப்பதற்கும், துரிதப்படுத்துவதற்கும், ஒதுக்கீட்டினையும் பெறுவதற்கும் மட்டுமல்லாது அழிந்துபோயுள்ள எமது பிரதேசத்தினை கூடிய விரைவாக அபிவிருத்தி செய்வதற்கும் ஒரேவழி எமது பிரதேசசபையை இரு நிர்வாக அலகாக மாற்றுவதாகும்.

அதாவது கச்சாய், மிருசுவில், வரணி ஆகிய மூன்று உப அலுவலகங்களையும் உள்ளடக்கி தென்மராட்சி கிழக்கு பிரதேச சபையெனவும் சரசாலை, கைதடி, நாவற்குழி ஆகிய மூன்று உப அலுவலகங்களையும் உள்ளடக்கியதாக தென்மராட்சி மேற்கு பிரதேச சபை எனவும் இரு நிர்வாக அலகாக மாற்றுவதன் மூலமே கூடிய விரைவாக மீளமைக்க முடியுமெனக் கருதுகின்றோம். மேலும் எமது பிரதேச சபைக்கு கடந்த 98ம் ஆண்டு ''றான்'' நிதியிலிருந்து ஒதுக்கியதற்கு பின்பு இன்று வரை எந்த ஒரு புனரமைப்பு நிதியும் எமக்குக் கிடைக்கவில்லை.

எனவே அழிந்துபோயுள்ள எமது பிரதேசத்தை மீளக்கட்டி எழுப்புவதற்கான அபிவிருத்தி நிதியினை தங்கள் அமைச்சிலிருந்து ஒதுக்கித் தந்து எமது பிரதேச மக்களின் மீள் குடியேற்றத்தில் கவனம். செலுத்த வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (ந)


**Jaffna College Institute of Technology**

Vaddukoddai.

**VACANCIES**

1. **Clerk Typist** -

Qualification: G.C.E. (A/L) with minimum experience of one year in Clerical Work. Typing skills with Computer Literacy preferable.

2. **Security Guards** -

Please bring References.

**Short listed candidates will be called for an interview.**

**Apply before February 18th, 2002, to**

Director,
**Jaffna College Institute of Technology,**
Vaddukoddai.

E- mail: jcit@sltnet.lk Telephone: 070 - 213139

[C/3524]



**இறைச்சிக் கோழி**
**(CULL BIRDS)**
**விற்பனைக்கு உண்டு**

அச்சுவேலி கோழிப்பண்ணையில் (CULL BIRDS) இறைச்சிக் கோழிகள் தொகையாக விற்பனைக்கு உண்டு. இவற்றை பெற விரும்புவோர் 19.02.2002 ம் திகதிக்கு முன் பிராந்திய கோழிப் பண்ணை, கைத்தொழில் பேட்டை, அச்சுவேலி எனும்முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

[C/3528]



**குழந்தையின் உணவு தாய்ப்பால் ~ அன்னை வழங்கிடும் அமிர்தம் தாய்ப்பால் ~ செல்லக் குழந்தைகள் விரும்பும் தாய்ப்பால் ~ அதை அன்னை கொடுப்பது அன்பால்.**

(C/3450)



## முக்கிய அறிவித்தல்

**தென்மராட்சி ஒருங்கிணைந்த கிராமிய கைத்தொழில் அபிவிருத்திச் சங்கம்**

மேற்படி சங்க அங்கத்தவர்களுக்கான பொதுக் கூட்டம்

*இடம்:-* **யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபம்**

*காலம்:-* **15.02.2002 வெள்ளிக்கிழமை பி.ப 2 மணி (பு.நே)**

*முக்கிய குறிப்பு:-*
**விண்ணப்ப படிவத்திற்கு தற்காலிக முகவரி கொடுக்காதவர்கள் சாவகச்சேரி தபால் நிலையத்தில் அழைப்பிதழ்களை பெற்றுக் கொள்ளலாம்.**

(புதிதாக தொழில் தொடங்குபவர்களும் இணைந்து கொள்ளலாம். கடன் ஊக்குவிப்புக்கள் வழங்கப்படும்)

**செ. கா. நவரத்தினம்**
**(விமலாஸ், மானிப்பாய்)**
**தலைவர்**

**க. இரவீந்திரநாதன்**
**செயலாளர்**


[C/3528]

[C/3528] [C/3528]


வடக்குக் கிழக்கு மாகாணம் கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் தமிழ் இலக்கியப் பெரு விழா திருகோணமலையில் நடைபெற்றது. விழாவில் கலைஞான கேசரி செல்லையா மெற்றாஸ் மயிலுக்கு (தமிழ்க் கலைவாணன்) முறையே, செயலாளர் திரு. க. சண்முகலிங்கம் பொன்னாடை போர்ப்பதையும், பிரதம செயலாளர் திரு. ஜீ. கிருஷ்ணமூர்த்தி ஆளுநர் விருதை வழங்குவதையும், இந்து சமய கலாசார அமைச்சின் செயலாளர் திரு. க. பரமேஸ்வரன் "மண்வாசனையில் மூன்று நாடகம்" நூலாக்கான விருதை வழங்குவதையும், "இசை நாடக கூத்து மூத்த கலைஞர் வரலாறு" நூலாக்கான விருதை வழங்குவதையும், நாட்டார் பாடலை ஒலிப் பேழையில் பாடியதற்காக சிரேஷ்ட கல்விப் பிரதிச் செயலாளர் ஜனாப் ஏ. சி. அப்துல் ஹக் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், விழாவில் கலைஞர் பாடுவதையும் படங்களில் காணலாம்.

[4478]














இப்பத்திரிகை வலம்புரி அன் கோ தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.02.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.